# வித்தியாலயம் 2000

வேலணை மத்தியமகா வித்தியாலயம் - பழையமாணவர் சங்கம் - பிரான்ஸ்




www.padippakam.com

www.padippakam.com

# கல்லூரிக்கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்க பாடசாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்
அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஓங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாளும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கிப் பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்
அன்பு ஆசான் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்.

படிப்பகம்

www.padippakam.com

# வித்தியாலயம் 2000

**கேள்விகள்...**
**கேள்விகள்...**
**கேள்விகள்...**

உலகில் வர்க்கங்களும், வேற்றுமைகளும் தோற்றுவிக்கப்பட்டபோதே போராட்டங்களும் தோன்றின. மனிதன் இறைச்சி சாப்பிடத் தொடங்கிய போதே உயிரழிப்பு ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. கி.மு. காலத்திலிருந்து தொடர்ந்த புலம் பெயர்வு இன்றும் தொடர்ந்து கொண்டிக்கின்றது. 83.பி. காலத்தில் எமது புலம் பெயர்வு தொடங்கி தொடர்ந்து கொண்டிருக்கின்றது இந்த கடைசி நிமிடம் வரை.

மிளகாய் புகையிலை நாற்றுகளை பிடுங்கி தோட்டத்தில் நட்டு வைக்கோல், நொச்சி, ஓதியங்குழைகளால் நிழலிட்டு நீரூற்றி வளர்த்தது போல் எம்வாழ்வும் பிடுங்கி புகலிடத்தில் பதியம் வைத்து மெது மெதுவாய்... கொஞ்சம் கொஞ்சமாய்... ஜீவியமாய்... வாழ்வாய்... வயது மட்டும் கூடியதை வளர்ச்சியாய் கண்டதையும் சொத்துக்கள் வாங்கியதை வளர்ச்சியாய் கண்டதையும், கற்றதுமாய் கொண்டு இம்மண்ணில் பல தரப்பினராய், பல மனத்தினராய்... நாம் இழப்புகளோடும் இடைஞ்சல்களோடும் இயங்கிக் கொண்டுதானிருக்கின்றோம். எப்படியிருப்பினும் தாயகத்தை மறத்தல் கூடுமோ?

பிறந்து, தவழ்ந்து, புழுதி அளைந்து, வேப்பமர நிழலில் விளையாடி, பூவரசில் ஏறிக் குதித்து, மழையில் நனைந்து, வெள்ளத்தில் விளையாடி, கடற்கரையில் பட்டம் விட்டு, கடலலையில் கால் நனைத்து, ஆவரம் பற்றையினுள் ஒழித்து விளையாடி, ஈச்சம் பழம் பிடுங்கி உப்பு நீரில் ஊறப்போட்டு மகிந்தினிதேயிருந்து... வளர்ந்து மெல்லவளிதையாய் வாலிபனாய் பெருங்குளத்தில் சிலுந்தா, சங்கத்தா கேணி, தேவகுளங்களில் நீராடி, வெள்ளைக்கடற்கரையில் குளித்து அருகேயிருக்கும் பலருமறியா அற்புதமாம் நன்னீர்க் கிணற்றில் மேல் கழுவி நீர்நிறை வயல்வெளி தாண்டி, வீதி வெள்ளத்தில் நடந்து, "சென்றல் கொலிச்" போய் படித்ததும், ஒழிந்து மறைந்ததுமாய்... நினைக்க வயது குறையும் அந்தப் பசுமையான கிராமிய வாழ்வை சற்றே நினைவு கொள்ள இந்த மலர் ஒரு சந்தர்ப்பம். தாய் மடியில் தலை வைத்தது போல் ஒரு ஆறுதல், நிம்மதி.

பிரிதலின் வேதனை சேரலில் புரியும். மீண்டு போய்ப்பார்க்க, ஆள, அனுபவிக்கும் வாஞ்சையாலும் ஏக்கங்களாலும் தாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றோம். இருந்தும் எல்லாம் கேள்விகளாய்...

ASSECVEL
73, Rue Doudeauville
75018 Paris
FRANCE

**2000**

மலர்க்குழு:
திரு.சு.கருணாநிதி
திரு.அ.தேவதாசன்
திரு.யா.பாலகிருஷ்ணன்

கணணி எழுத்துப்பதிவு:
திரு.யா.பத்மநாதன்
திரு.ப.கந்தப்பிள்ளை
திரு.க.சிவகரன்

ஓவியங்கள்:
அ.தேவதாசன்

வடிவமைப்பு அச்சுப்பதிப்பு:
கிருஷ்ணா அச்சகம்

படிப்பகம்

www.padippakam.com

நாம் கேள்விகள். நமக்குள் கேள்விகள். நம்மை நோக்கிக் கேள்விகள். நம்மைச் சுற்றிக் கேள்விகளே கொட்டிக் கிடக்கின்றன. எங்கும் எதிலும் கேள்விகள்! கேள்விகள்!! ? ... ?? ..... ???

நாம் உயிர் தப்பி? வந்து விட்டோம். வாழ்ந்து? கொண்டிருக்கின்றோம். ஆணிவேர் அறுந்த நமது பக்கவேர்கள் இன்னும் தாய் மண்ணில்... அவர்களை மறத்தல் நியாயமாகுமா? அவர்கள் வாழ்வுரிமையுடன் வாழவேண்டுமென்று விரும்புகிறோமல்லவா! MIEN வேலை. MIEN காசு. MY பிள்ளை. MY வீடு. MY மனைவி என்று வீட்டிற்குள் வாழ்வது மட்டும் வாழ்வல்ல. வீட்டிற்கு வெளியும் நமது தான்.

எமது கல்லூரியில் கல்வி பயிலும் எம் இளைய தலைமுறையினருக்கு கல்வி வளர்ச்சியை, அபிவிருத்தியை, வசதிகளை ஏன் நாம் செய்து கொடுக்க வேண்டும்? அரசாங்கம் கவனிக்கும் தானே! உயிர் வாழ்வதற்கு உத்தரவாதமில்லாதவர்களுக்கு படிப்பு தேவையா? மருந்தும் உணவும் இன்றித் தவிப்பவர்களுக்கு...? கேள்விகள்...? கேள்விகள்...? கேள்விகள்...? கல்வி அத்தியாவசியத் தேவையா?

மருந்தும், உணவும் அரசுடன் போராடிப் பெறுவதற்கு சாத்தியமுண்டு. கல்வியை? கிட்டத்தட்ட முப்பது வருசங்களாக கல்வி தரப்படுத்தலால் நம்மினம் ஒடுக்கப்பட்டு அவல, அலங்கோலமான இந்த வாழ்விற்குத் தள்ளியவர்களிடம் கல்வி வளர்ச்சிக்கான உதவியை எதிர்பார்க்க முடியுமா?

“ஒரு இனத்தை அழிப்பதற்கு அவர்களது கல்வியை அழி” என்ற சோக்கிரட்டீஸின் கூற்று நடைமுறைப்படுத்துபவர்களிடம்...?

ஒரு உறுப்பினரேனும் வெளிநாட்டில் இல்லாத குடும்பங்கள் எத்தனையாயிரம்? மாளிகையும் குடிசையும் அருகருகே இருந்தால் அவ்விடத்தில் எப்படி சமத்துவம், சகோதரத்துவம், அமைதி நிலவும்? இக்கேள்வி உணர்ந்து கொள்வதற்கே.

அசைவனவெல்லாம் ஒரு மையப்புள்ளியிலிருந்து தான் புறப்படும். நாமும் நின்ற இடத்தில் பிறந்த வீட்டிலிருந்து புறப்படுவோம். முதலில் அசைவோம். புறப்படுவோம். மாறுதல் - மாற்றத்தை முன்னேற்றத்தை நோக்கிய நகர்வு - அசைந்து, நகர்ந்து, நடந்து, ஓடி, தொகுதி வட்டம் மாவட்டமாய் மெல்ல வளர்ந்து விரிந்து பரவி....

எண்பதாம் ஆண்டில் பிறந்தவர்கள் அண்மையில் வந்திருந்தால் அவர்களைச் சந்தியுங்கள் தமிழில் கதையுங்கள், தத்துவார்த்தமாகவும் அறிவார்த்தமாகவும் புரிதலோடு கதைக்கின்றார்கள். ஒரு பிரெஞ்சு சொல்லுக்கு தமிழில் விளக்கம் சொல்ல நமது நல்ல தமிழ் அவர்களுக்கு விளங்குதில்லை. “கோக்குவில்” என்றெழுதியவர்களையும், ஜனரஞ்சகம், தற்குறி என்றால் என்ன? என்று கேட்பவர்களையும் பார்த்திருக்கிறேன். என்ன கொடுமையிது? இது அவர்கள் குற்றமில்லை.

எழுத, வாசிக்க கற்றுக் கொடுக்காமல் பேச மட்டும் கற்றுக் கொடுத்து அவர்கள் உழைப்பையும் வளத்தையும் சுரண்டி கொழுப்பேற்றிக் கொண்ட பிரெஞ்சு நாட்டின் காலனித்துவ ஆபிரிக்க நாட்டவர்களை நாம் சந்திக்கவில்லையா? வேதனைப்படவில்லையா?

கேள்விகள்... கேள்விகள்... கேள்விகள்... நமக்குள்ளேயும் வெளியேயும் கேள்விகள். நம்மை நோக்கியும் தாக்கியும் கேள்விகள். நம்மைச் சுற்றியும் கேள்விகள். வாருங்கள் சேருங்கள் வளம் படுத்துவோம்.

-மலர்க்குழு

படிப்பகம்

www.padippakam.com

# தலைவரின் செய்தி

எமது பாடசாலையின் "வித்தியாலயம் 2000" என்ற மலரோடு உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

விடைபெறும் 20 ஆம் நூற்றாண்டிற்கு கையசைத்து மலரப்போகும் 21 ஆம் நூற்றாண்டை இரு கரம் கூப்பி வரவேற்போம். புதிய நூற்றாண்டு அனைவருக்கும் சுபீட்சம் நிறைந்ததாக மலரவேண்டும் என்று ஒரு மனதாக பிரார்த்திப்போம்.

இருபதாம் நூற்றாண்டைத் தாண்டி மீண்டும் ஒரு புதிய நூற்றாண்டில் காலடி வைக்கும் எமது பாடசாலை, தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தத்தினால் பல சிரமங்களைச் சிந்தித்துள்ளமை யாவரும் அறிந்ததே. தீவகத்தில் இருந்து ஒரே நாளில் மக்களெல்லாம் இடம் பெயர மக்களோடு மக்களாக எமது பாடசாலையும் இடம் பெயர்ந்து யாழ் நகர் சென்றது. அவ்வேளை தமது உயிரை தற்காத்துக் கொள்ள இடம் பெயர்ந்த மக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பிடம் தேடி அலைந்தனர்.

அப்போதைய பதற்ற நிலையிலும் ஒன்றிணைந்த எமது ஆசிரியர் குழாம் தம்மைச் சூழ்ந்திருக்கும் யுத்தமேகம் வழமையானது தான் இருந்த போதிலும் நிலையானது அல்ல. யுத்தமேகம் எப்போதாவது விலகத் தான் போகிறது. அதன் பின்னர் எமது எதிர்கால சந்ததியினரின் நிலையென்ன என்ற நோக்கில் சிந்தித்தமையினால் தான் யாழ் நகரில் கொட்டடியில் பாடசாலையை இயக்க முடிந்தது. அங்கும் நிலவிய பதற்ற நிலையில் அங்கிருந்தும் இடம் பெயர்ந்து அரசடி வீதிக்கு கொண்டுசெல்ல வேண்டியதாயிற்று. பின்னர் வேலணைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் தனது சொந்தக் கட்டிடத்தில் இயங்க முடியாமல் சகோதர பாடசாலையொன்றில் இயங்கி மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்குவது எமக்கெல்லாம் ஆறுதல் தான்.

இருந்தபோதிலும் தொடர்ந்த இடப் பெயர்வுகளாலும், மாணவர்களின் நலனில் அரசு காட்டும் அசமந்தப் போக்கினாலும் மாணவர்களின் மனநிலை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் கல்வி பின் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவர்களை இந்நிலையில் இருந்து மீட்கவும், அவர்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கையை வரவழைப்பதற்காகவும், எமது நாட்டை நல்ல முறையில் கட்டிக்காக்கவும் புலம் பெயர்ந்த நாம் ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியமாகிறது.

அந்த வகையில் தோற்றுவிக்கப்பட்டது தான் பொது அமைப்புக்கள், பழைய மாணவர் சங்கங்கள் போன்றவை. எமது பழைய மாணவர் சங்கம் காலம் சென்ற அதிபர் திரு.சே.பொ.கேதாரநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.யா.பாலகிருஷ்ணன் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு ஒரு தசாப்தத்தினை எட்டிக் கொண்டிருக்கிறது.

இதுவரையில் பிரான்ஸ் கிளை பல செயற்திட்டங்களை எடுத்து செயற்படுத்தியிருக்கின்றது. ஆனாலும் இன்னும் பாடசாலையில் நிறையத் தேவைகள் உள்ளது. அவற்றையெல்லாம் செயற்படுத்தவேண்டுமானால் புலம் பெயர்ந்து வாழும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள், எதிர்கால சந்ததியின் பால் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று எமது சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

அ. இயல்வாணன்
தலைவர்,
வே. ம. ம. வித்தியாலய
பழைய மாணவர் சங்கம்
(பிரான்ஸ் கிளை)

படிப்பகம்

www.padippakam.com

## ஒருவரை அறியா ஒருவராய்.....

அவன்,
நிறங்களின் பெயரை
சொல்வதில்லை,
"நிறத்துவேசி"
என்பார்கள் என்பதற்காக...

ஊர் பெயர்களையும்
குறிப்பிட்டுப் பேசுவதில்லை,
"பிரதேசபேதி"
என்பார்கள் என்பதற்காக...

மனித இனங்களின்
பெயர்களையும் சொல்வதில்லை,
"இனத்துவேசி"
என்பார்கள் என்பதற்காக...

தாய்நாட்டை நேசிப்பதில்லை,
"சுயநலவாதி"
என்பார்கள் என்பதற்காக...

விடுதலைப் போர்களையும்
ஆதரிப்பதில்லை,
"வன்முறையாளன்"
என்பார்கள் என்பதற்காக...

தமிழிசம் பேசுவதில்லை,
"அராயகவாதி"
என்பார்கள் என்பதற்காக...

இதனால் யாரையும்
அவனுக்குத் தெரியாது
யாருக்கும் அவனைத் தெரியாது.

வேலணையூரான்

## பசுமை நினைவுகள்

பள்ளிப் பருவத்துப் பசுமை நினைவுகள்
நேற்றுப் போல் உள்ளது
துள்ளித் திரிந்த காலத்தில்
துயர்மறந்து
அள்ளிப் பருகிய அறிவுத் துளிகளெல்லாம்
அன்றென்னை வளர்த்தெடுத்த
ஆசானின் பேர் சொல்ல
இன்றளவும் இதயத்தில்
இருத்தி நான் பார்த்தெல்லாம்
இன்றென்னை மனிதனென்று
இறும்பூதெய்த வைத்த எங்கள்
வேலணை மத்திய மகா வித்தியாலயமே - அவ்
ஆலயத்தில் குடியிருந்து
அறிவுக்கண் பெற்ற அந்த
நாளனைத்தும் நினைவில் வரும்
நாள் கடந்தும் இன்பம் தரும்
நாடிழந்து வேறு நாட்டில்
நலிந்திருக்கும் நாளில்
கூடியிங்கு நாமமைத்தோம்
பழைய மாணவர் சங்கமதை
எங்கு நாம் வாழ்ந்தாலும்
இன்றும் எம் நாட்டில் வாழும்
எம் இனிய உறவுகளோ
என்றும் அங்கு தளைத்திருக்க
எங்கள் சங்கம் உழைத்திடட்டும்
என்றென்றும் வளர்ந்திடட்டும்

தங்கம் சுந்தரலிங்கம்

www.padippakam.com

**எமது பாடசாலை அதிபர்**

# திரு. குழந்தைவேலு கணேசலிங்கம்

**அவர்களின் வாழ்த்துரை**



ஒரு அன்னை தன் பிள்ளைகளின் சிறப்பினாற் பெரிதும் உவப்பு அடைவாள் என்பர். எமது கல்லூரி அன்னையும் உலகெங்கும் பரந்து நிற்கும் தன் தவப் புதல்வர்களின் கடமையுணர்வினையும் உயர்வினையும் பார்த்துப் பூரிப்பு அடைகின்றாள். வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்சுக் கிளையினர் கிளையின் ஏழாவது ஆண்டுப் பூர்த்தியில் நடாத்தும் ஒன்றுகூடலும் கலைவிழாவும் கல்லூரி அன்னைக்கு அளிக்கும் காணிக்கையாகும். இடம் பெயர்ந்து யாழ் நகரில் இடருற்று நின்ற வேளையில் உதவி வேண்டிய போது விரைந்து செயற்பட்டு மாணவர் இடையூறின்றிக் கல்வியைத் தொடர்வதற்கு அளித்த உதவிகள் பல. பிரான்சுக் கிளையினரின் பொருளுதவி மட்டுமன்றி அவர்களின் உயரிய சிந்தனையினின்றும் தோன்றிய உளக்குறிப்புகளும் எம் மாணவரிடையே நல்விளைவுகளை ஏற்படுத்தின. யாழ். நகரின் ஏனைய கல்லூரிகளிலும் விட யாம் சளைத்தவர்கள் அல்ல என்று எம் மாணவர் வீறு நடை போட அவர்கள் உதவியதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றோம். அவர்களின் முடிவற்ற உதவிகள் இன்றும் தொடர்கின்றன. பிரான்சு பழைய மாணவர் சங்கக் கிளை தன் பலத்தைப் பெருக்கி ஒற்றுமையுடன் ஒரு விருட்சமாகத் தொடர்ந்தும் விளங்க வேண்டும். இவர்களின் ஒன்று கூடல் சிறப்படையவும் கலைவிழா பெருவிழாவாக அமையவும் வாழ்த்துகின்றோம்.

திரு.கே.கணேசலிங்கம்
B.A,Dip-in Ed,M.A.

படிப்பகம்

www.padippakam.com

எமது பாடசாலையின் பிரதி அதிபர்

## திரு. பொன்னம்பலம் ஈசன்

அவர்களின் வாழ்த்துரை



வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம், பழைய மாணவர் சங்கத்தின் பிரான்சு கிளையின் ஒன்றுகூடலும் கலைவிழாவும் சிறப்புற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள். இந்நிகழ்வு அதன் வளர்ச்சிக்கு மட்டுமன்றி எம் கல்லூரியின் சிறப்புக்கும் உரமிடுவதாகும். எமது மாணவரின் கல்வி விருத்திக்கு தடை ஏற்பட்ட போது அதனை வளர்ப்பது தம் கடமை எனக் கருதி உரிய நேரத்தில் வேண்டிய உதவிகளைச் செய்தவர்கள் பிரான்சுக் கிளையினர். தம்மை இனங்காட்டாது பெரு முயற்சி செய்து பொருள் திரட்டி உதவிய கிளையின் நிர்வாகசபை உறுப்பினர்களையும் பாராட்டுவதில் பெரு மகிழ்வு அடைகின்றோம்.

பொன்னம்பலம் ஈசன் B.Sc.

படிப்பகம்

www.padippakam.com

# பீடு நடை போடுக. . . .



வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்சுக் கிளையின் ஏழாவது ஆண்டு நினைவின் ஒன்றுகூடலும் கலைவிழாவும் நடைபெறுவது எமக்கு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஒன்றுகூடல் ஒற்றுமையை வலுப்படுத்தும். கலைவிழாவினால் தேமதுரத் தமிழோசை பரவும். கல்லூரி அன்னையின் புகழ் மணக்கும். கல்லூரியின் இனிமையான நினைவுகள் மீட்கப்படும். இதே நேரத்தில் பிரான்சுக்கிளை பழைய மாணவர் சங்கம் எமது இன்னல் அறிந்து செய்த உதவிகள் நினைவில் வருகின்றன.

நாம் இடம் பெயர்ந்து சென்று கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் ஒட்டிக் கொண்டிருந்து விட்டு அன்னைக்கென்று தனியிடம் தேடிய போது பரந்த மாஞ்சோலையொன்று கிடைத்தது. அரசாங்கம் அமைத்த தற்காலிகக் கொட்டகைகள் இரண்டும் மாணவர் கற்பதற்கு போதாமல் இருந்தன. பன்னாட்டின் பழைய மாணவ சங்கங்களிடம் உதவி வேண்டிய போது பிரான்சுக் கிளையினர் உடனடியாக பணம் திரட்டியது மட்டுமின்றி விரைவில் எம்கையில் கிடைப்பதற்கு ஆவன செய்தது எம்மால் மறக்க முடியாத ஒன்றாகும். அதைத் தொடர்ந்து ஆர்வமான கொடுப்பனவுகளும் கடிதப் பரிமாறல்களும் கல்வி விருத்திக்கு உற்சாகம் ஊட்டக்கூடியனவாக இருந்தன. அவர்களின் உதவியினால் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. ஆசிரியர் பற்றாக் குறையை நீக்க தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். மீண்டும் தீவகத்திற்கு திரும்பிய போது தனியாக இயங்குவதற்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயம் கிடைத்தது. பொருள் வசதியற்ற நிலையில் அவர்களின் உதவியால் கல்லூரி தடையின்றி இயங்கியது. நாம் நமது சொந்தக் கல்லூரியில் கால்வைத்த பின் பன்னாட்டுப் பழைய மாணவர் சங்கக் கிளையினர் உதவ முன்வந்து பல அபிவிருத்தி திட்டங்களைப் பொறுப்பேற்றனர். பிரான்சுக்கிளையினரின் உதவியினால் நூலகம் விரிவடைந்தது. உள்ளக விளையாட்டுக்குரிய உபகரணங்களினால் மாணவர் ஓய்வு நேரங்களைப் பயனுள்ளதாக்கினர். இடப் பெயர்வினால் தாய் மொழியில் தரம் குறைந்து இருந்த மாணவர்களுக்கு மாலை நேரத்தில் விசேட வகுப்புக்கள் நடாத்தி தாய்மொழி திறன் விருத்தி செய்யப்பட்டது. இவையெல்லாம் அன்னையின் தவப் பயன்தான். சுயநலமும் புகழ் விருப்பும் அறிவையே குழப்பும் இக்காலத்தில் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் இக் கிளை இயங்குவது எம் அன்னைக்கு பெருமை சேர்க்கும் செயலாகும். விழா இனிது நடந்தேற எம் இதயம் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

திருமதி. வேதவல்லி அரசரத்தினம்
(சிரேஷ்ட ஆசிரியை.)B.A,Dip-in-Ed

www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம் -கனடா

VELANAI MADYA MAHA VIDYALAYAM

OLD STUDENTS' ASSOCIATION - CANADA

(A Registered Non Profit Organization)

Tel: (416) 323 - 3070 / 299-3486

Regd. No:1279755 Fax: (416) 429 - 6455



**Patrons**

Dr. K. Sittampalam
Mr. K. Sivaramalingam
Mr. V. Sivanathan
Dr. Pon Vimalendran
Mr. S. Mohanachandran

**President**

Mr. Pon Panchalingam

**Vice President**

Mr. Pon Karunakaran

**Hon. Secretary**

Mr. K. Elanthirayan

**Assist. Secretary**

Mr. P. Jeyachelvan

**Hon. Treasurer**

Mr. S. Poologapooranan

**Committee members:**

Mr. S. Elancheliyan
Mr. K. Baskaran
Mr. S. Thayalan
Mr. R. Thiruvarooran
Mr. P. N. Magesan
Mr. K. Gnanachemmal
Mr. T. Kanthagnani
Mr. K. Selvagnanam
Mr. S. Kumarathasan
Mr. S. Meakavarnan

**Hon. Auditor:**

Mr. N. Kandavel

### கனடாக் கிளைத் தலைவரின்
### வாழ்த்துச் செய்தி

பேரன்புடையீர்,

தங்களது சங்கத்தினால் நடாத்தப்படும் 'வித்தியாலய விழா 2000'இற்கு வேலணை ம.ம.வி பழைய மாணவர் சங்கம்-கனடாவின் சார்பில் வாழ்த்துச்செய்தியினை அனுப்பி வைப்பதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நாம் பிறந்த மண்ணைவிட்டுப் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்தாலும், எம்ஊரின், கற்ற கல்லூரியின் நினைவுகள் என்றும் எம் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. எம்மை ஆளாக்கிய எமது கல்லூரியின் இன்றைய தேவைகளை நிறைவேற்றவும், ஊரையும் உறவையும் ஒன்றிணைத்து எம் இளைய தலைமுறையினரும் தொடரவே நாம் இங்கு 'வேலணை மத்திய மகா வித்தியாலம் பழைய மாணவர் சங்கம்' என்ற பெயரோடு 1995ம் ஆண்டு எமது சங்கத்தை ஆரம்பித்தோம். எமது சங்கத்தின் முக்கிய செயற்பாடாக நாம் எமது பாடசாலையின் இன்றைய மாணவர்களுக்கு சத்துணவை வழங்கி வருகின்றோம். அத்தோடு இன்னும் எம்மாலான பங்களிப்பையும் செய்து வருகின்றோம்.

எம் ஊரையும் உறவையும் ஒன்றுகூடவைத்து, எம் இளைய தலைமுறையினரும் தொடர கோடைகாலத்தில் ஒவ்வொரு வருடமும் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றோம். அத்தோடு சென்ற வருடம் எம்மவரின் கலைத்திறனை வளர்க்கவும், வெளிப்படுத்தவும் 'கலாதீபம்' என்ற மண்டபம் நிறைந்த கலை விழாவை சிறப்பாக நடாத்தி அதன்மூலம் பெரும் பங்களிப்பை எம் பாடசாலைக்கும் தாயக மக்களுக்கும் வழங்கியிருக்கின்றோம். இவ்விழாவினை வருடந்தோறும் தொடர்ந்து நடாத்தவுமுள்ளோம்.

பிரான்ஸ் நாட்டில் தாங்கள் ஒன்றிணைந்து விழா நடத்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' இதைக்கற்றுத்தந்தது எம் கல்லூரி. அன்னையின் பிள்ளைகளாகிய நாம் இதனை மனதிற்கொண்டு அனைவரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். வேறுவேறுநாடுகளில் இருந்தாலும், சங்கங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை எம் கல்லூரிக்கு மேலும் மதிப்பைக்கொடுப்பதுடன் கல்லூரியின் தேவைகளை இனங்கண்டு உதவ வழிவகுக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் விழா சிறப்புறவும், தொடர்ந்து வரும் உங்கள் முயற்சிகள் வெற்றியளிக்கவும், எங்கள் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

'வாழ்க பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம், வளர்க அதன் உன்னத பணிகள்'

அன்புடன்

பொன் பஞ்சலிங்கம்
தலைவர்
வேலணை ம.ம..வி பழைய மாணவர் சங்கம்-கனடா

*For more information, Please visit our Wepsite* @ **www.vmmvosa.on.ca**

படிப்பகம்

www.padippakam.com

# எமது கல்லூரி அதிபர் திரு.கே.கணேசலிங்கம் அவர்கள் கல்லூரியின் பொன்விழாவில் நிகழ்த்திய உரை

**எமது கல்லூரிஒரு கண்ணோட்டம்**

இன்று, அரைநூற்றாண்டு காலத்தை தனது வளர்ச்சிப் பாதையில் கடந்து நிற்கும் எமது கல்லூரி, 1-11-45 அன்று, அன்றைய கௌரவ கல்வி அமைச்சராக விளங்கிய C.W.W கன்னங்கரா அவர்களின் திட்டத்தில் உதித்த நாடளாவிய ரீதியிலான 50 மத்திய கல்லூரிகளில் ஒன்றாக உருப்பெற்றது.

அன்று இது மத்திய கல்லூரி என்ற நாமம் பெற்றிருந்ததுடன், அன்றைய நாடாளுமன்ற சபாநாயகராக இருந்தவரும், எமது கிராமத்தைச் சேர்ந்தவருமான பெரு மதிப்புக்குரிய சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களின் பெருமுயற்சியினால் சப்த தீவுகளில் நடுநாயகமான வேலணையில் இது அமைவதற்கு வழியேற்பட்டது. அன்னாரது பெருமுயற்சியை நினைவு கூரு முகமாகவே இக் கல்லூரியின் பெயர் 1982 தொடக்கம் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி மாக மாற்றம் செய்யப் பட்டது.

இது தீவகத்தின் மணிவிளக்காக அன்று தொடக்கம் விளங்கியதுடன் 1AB தரத்தையும் பெற்று சகலவளங்களையும் கொண்ட சுமார் 1500க்கு மேற்பட்ட மாணவர்களையும் 60ற்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் உள்ளடக்கிச் சிறப்பாக சேவையை எமது தீவக மாணவர்களுக்கு வழங்கிவந்துள்ளது. இந்த மரத்தில் பூத்த மலர்கள் இன்று உலகின் பல திசைகளிலும் மணம்பரப்பிக் கொண்டு இருக்கின்றன.

எமது 50 ஆண்டுகாலக் கல்லூரி வரலாற்றில் அதன் அதிபர்களாக இருந்தவர்களும் தமக்கென பல சிறப்புக்களைப் பெற்றுள்ளார்கள். எமது கல்லூரியில் முதல் அதிபர் திரு. A. K. கந்தையா அவர்கள். இவர் ஆங்கிலக்கல்விக்கு அத்திவாரம் இட்டவர். தொடர்ந்து நீண்டகாலமாக அதிபராக பணியாற்றி இக்கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். பெருமதிப்புக்குரியவர் திரு. ஏ. தம்பு அவர்கள். இவர் காலத்தில் தான் இன்று நாம் இருந்து உலாவும் மாடிக்கட்டிடங்கள், விடுதிகள் என்பன கட்டப்பட்டன. வகுப்புகளும் துறைகளும் மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கிப்பெருகின. மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குப் புகுவதற்கும், பலதுறைகளில் தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்கும் வழிஅமைத்தவர் இவரே. இவரது சேவையை மறவாத பழைய மாணவர்கள், இன்றும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அன்னாரது பெயரினால் புலமைப்பரிசில் ஒன்றை வழங்கி நினைவு கூருகின்றார்கள். தொடர்ந்து திரு. A. T. சபாரெத்தினம் அதிபராகக் கடமையாற்றிய காலம் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் பலவும் உருப்பெற்றகாலம். இவர்களை அடுத்து திரு. கே. சிவசிதம்பரம், திரு. J. S. அரியரெத்தினம் ஆகியோர் அதிபர்களானார்கள். திரு. V. பொன்னுத்துரை இவர் இவ்வூரையே பிறப்பிடமாகக் கொண்டு இக்கல்லூரியில் ஆசிரியர், உப அதிபர், அதிபர் ஆகிய பதவிகளை அலங்கரித்தவர். அடுத்து 1972ம் ஆண்டில் அதிபர் பதவியைப் பெற்று இங்குவந்த திரு. C. இராஜநாயகம் அவர்களது காலமும் சிறப்பான காலமாகும். விஞ்ஞானப் பிரிவுகள் இக்காலப்பகுதியில் பெரும்வளர்ச்சி கண்டன.

இவர் பதவி உயர்வுடன் செல்ல திரு. S. தியாகராசா அதிபரானார், இவரது சிறப்பான சேவையைத்தொடர்ந்து பதவிக்கு வந்தவர் திரு. C. குணபாலசிங்கம் அவர்கள். அன்னாரது காலத்தில் நூலகத்துக்கான புதிய மாடிக்கட்டிடம், விளையாட்டு மைதானம் என்பன தோன்றின. இவர் காலத்திலேயே தான் எமது பாடசாலையும் இன்றைய பெயருடன் புதிய மாற்றம் பெற்றது. இக்கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் (பெரும்) ஆசானாக விளங்கிய பண்டிதர் க. இராசையா அவர்கள் உதவி அதிபராக பணியாற்றியவர். திரு. C. குணபாலசிங்கம் விட்டுச்சென்ற இடைவெளியை நிரப்பியவர். அவரது சிறப்பான சிறிதுகாலப் பணியைத் தொடர்ந்து திரு M. சிவராசரட்ணம் பதவி ஏற்றார். இவர்காலத்தில் இன்று இக்கல்லூரியின் உயிர்நாடியாக உள்ள நடராஜர் ஆலயம்

படிப்பகம்

www.padippakam.com

கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பொலிவுற்றது. அன்றைய கொத்தணி அமைப்பு முறையின் புதிய அதிபராக வேலணைக் கோட்டத்தில் விளங்கியவர். இக்கல்லூரியிலேயே கல்விகற்று ஆசிரியருமாகக் கடமையாற்றிய திரு. S. சண்முகநாதன் தொடர்ந்து அதிபர் பதவியை ஏற்று நடத்தினார். இக்காலப்பகுதியைத் தொடர்ந்து இக்கல்லூரியின் பழையமாணவர்களே அதிபர்களாகினர். திரு. சண்முகநாதன் அவர்கள் பதவி உயர்வு பெற்று புதிதாக ஆரம்பித்த வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குச் செல்ல, பிரதி அதிபராக இருந்த திரு. பொ. கேதாரநாதன் அவர்கள் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் நாடு பெரும் குழப்பங்களால் சீரழிந்தது, இன்னல் மிக்க காலத்தில் அதிபராக இருந்த இவர் பல இடையூறுகளையும் எதிர்நோக்க வேண்டியவராக இருந்தார். 1990, 1991களில் இரு இடப் பெயர்வுகள் ஏற்பட்டன. இருமுறைகள் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் பின்னர் கொட்டடி நமசிவாயம் வித்தியா சாலையிலும் எமது கல்லூரியை இயங்கவைக்க வேண்டிய பாரிய பொறுப்பை அவர் சுமந்து நின்றார். இடம் பெயர்வு நிலை தொடர்ந்து காணப்படவே எமது பாடசாலையை யாழ்ப்பாணத்தில் தனித்து இயங்கவைக்க வேண்டும் என்பதில் அல்லும் பகலும் உழைத்து அரசடி வீதியில் இரு தனியார் வீட்டையும் பொருளையும் பெற்று அங்கு எமது பாடசாலையை அமைக்க முயற்சி எடுக்கும் வேளையில் அன்னார் ஓய்வுக்குரியவரானார்.

அவரைத் தொடர்ந்து பொறுப்பை ஏற்றவர் அவரது மாணவன் திரு. சு. கலாதரன். இவரது காலம் பாடசாலை இடம் பெயர் வேளையின் பொன்னான காலம். இவர் இளமைத் துடிப்பும் சுறுசுறுப்பும் ஆர்வமுடைய அதிபர், 24 மணி நேரமும் அதிபர் சேவை என்பதில் நம்பிக்கைகொண்டு பணிபுரிந்தவர். இவரது அயராத உழைப்பும், பாடசாலை பழைய மாணவரது பெரும் பங்களிப்பும், அவர்களது உழைப்புமாகச் சேர்ந்து யாழ். அரசடி வீதியில் எமது பாடசாலை பல கொட்டில்களைக் கொண்டு விளங்கியது. ஆய்வுகூடவசதிகள், ஏனைய பல வசதிகள் அற்ற நிலையிலும் எமது கல்லூரிக்கான மாணவர்கள் ஆசிரியர்கள் சிதறிய நிலையிலும் புதிய மாணவர் கூட்டத்தை உள்வாங்கிக் கல்விவளர்ச்சியிலும் ஏனைய பல துறைகளிலும் நகரப்பாடசாலைகளுக்கு நிகரானவகையில் கல்லூரியை முன்னேற்றப் பாதையில் இட்டுச்சென்றவர். 1995-ம் ஆண்டு க. பொ. த் (உயர்தர) பெறுபேறுகள் மிகச் சிறந்த முறையில் பெற்றமை கல்வி வளர்ச்சிக்கு உதாரணமாகும். 90 % மாணோர் பல்கலைக் கழகத் தகுதியைப் பெற்றதுடன் பலர் பல்கலைக்கழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வளர்ச்சிக்குப் பேரிடராக வந்தது, 1995ம் ஆண்டு யாழ். மக்கள் இடம் பெயர்வு. கல்லூரியும் சேர்ந்து ஓடவேண்டிய நிலைஏற்பட்டது. சாவகச்சேரியில் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளை உள்ளடக்கிய கூட்டுப்பாடசாலைக்கு திரு. கலாதரனே அதிபராக இருந்தார். ஆனால் எமது கல்லூரியின் ஆசிரியர்கள். மாணவர்கள் பலரும் திசைமாறிச் சென்றனர். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இக்கட்டான நிலைகளினால் அதிபரும் யாழ். மாவட்டத்தை விட்டு இடம் பெயரவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. அன்னாரது சேவை நிலைத்து நிற்கவேண்டிய தொன்று.

இதனைத் தொடர்ந்து 1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எமது கல்லூரி மீண்டும் சொந்த ஊருக்கு வரக்கூடியநிலை ஏற்பட்டது. ஆனாலும் சொந்தக் கட்டிடத்தில் அமரமுடியவில்லை. சொந்த ஊர்வந்தும் இரவல் இடமே. இரண்டு பிரதி அதிபர்களையும் ஏனைய 4 ஆசிரியர்களையும் மட்டுமே கொண்டு தனக்கென எவ்விதமாணவர்களும் அற்றநிலையில் 20-05-96 தொடக்கம் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில கூட்டுப் பாடசாலையாக பிரதி அதிபர்கள் திரு. பொ. ஈசன், திருமதி வ. சிவபாலன் தலைமையில் இயங்க வேண்டிய நிலை. பாடசாலையின் மிக நொந்தகாலம். மீண்டும் பாடசாலை தனித்துவமாக இயக்கினாற்தான் பாடசாலையை வளர்க்க முடியும் என்ற நிலை. எனவே பெரும் சிரமத்தின் மத்தியில் பிரதி அதிபர்கள் பொ. ஈசன், திருமதி வ. சிவபாலன் ஆகியோரது மற்றும் அன்று எஞ்சிநின்ற ஆசிரியர்கள் திரு. சு. கனகநாயகம், திருமதி வே. அரசரெத்தினம், திரு. ரி. கேதீஸ்வரன் ஆகியோரதும் பெருமுயற்சியினால் இடிந்துபோய்க்காணப்பட்ட வேலணை சரஸ்வதி வித்தியாலயம் எமது கல்லூரிக்கென பல லட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட இருந்தது.

இக்கால வேளையில் 1997 பெப்ரவரியில் நான் இக்கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்கும் நிலை ஏற்பட்டது. பொறியியலாளர் திரு. கு. சிவபாலன், அதிர்ஷ்டவசமாக இக் காலப்பகுதியில்

படிப்பகம்

www.padippakam.com

கல்விப்பணிப்பாளர் பதவியை ஏற்ற அமரர் சு. இரத்தினராசா ஆகியோரது சிறந்த பங்காற்றலுடன் குறிப்பிட்ட சில மாதங்களில் அப்பாடசாலை திருத்தி அமைக்கப்பட்டு எமக்கு கையளிக்கப்பட்டது. புதிய ஆசிரியர்கள் பலரும் நியமிக்கப்பட்டனர். சிறுமாணவதொகையினருடன் 24-04-97 அன்று நாம் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் எமது கல்லூரியை அமைத்துக்கொண்டோம். இவ்வேளையில் எமக்கென தனியானதொரு இடத்தைப் பெற்றுத்தந்து அதனை மிகக் குறுகியகால இடைவேளையில் அழகுற அமைத்துத் தந்த பெருமை, அக்காலகட்டத்தில் வேலணைப் பிராந்தியத்தின் பிரிகேடியராக இருந்த அமரர் கேர்ணல் சுகந்த மெண்டிஸ் அவர்களையே பெரிதும் சாரும். இவ்வேளையில் நாம் அவரை நினைவு கூரவேண்டியவர்களே.

இதனைத் தொடர்ந்து வந்த நாட்களிலே எமது கல்லூரியின் மாணவர்தொகை அதிகரித்ததுடன் ஏனைய வகைகளையும் பெருக்கிக்கொண்டோம். புதியதொரு பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அமைத்து அவர்களினதும், ஏனைய நலன் விரும்பிகளினதும், பெற்றோர்களினதும் இடையறாத தொடர்பாடல்களின் விளைவாக மீண்டும் எமக்கு எமது கல்லூரிக்கட்டிடம் பல நிபந்தனைகளின் மத்தியில் கையளிக்கப்பட்டது. பல்வேறு விதமான சிரமத்தின் மத்தியில் 27-8-98 அன்று இப்பாடசாலையில் புகுந்து, இன்று நாம் கல்லூரியின் இந்த மண்டபத்திலே பொன்விழா பரிசுத்தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

கடந்த 1990ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இக்கல்லூரியின் அதிபராகவும் ஆசிரியராகவும் கண்டபலன்கள் சொல்லித் தெரிய வேண்டியவை அல்ல. இத்தனை இன்னல்களுக்கும் மத்தியில் கல்லூரி தனது கல்வி வளர்ச்சியிலும், ஏனைய துறைகளிலும் சிறப்புற பணியாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களது சேவை மதிக்கப்படவேண்டியவை. முக்கியமாக 1996ல் இருந்து எமது சொந்த இடம் திரும்பியபின் இக்கல்லூரியில் பணியாற்றும் அத்தனை பேரும் யாழ். நகரில் இருந்து வருபவர்கள். பெரும் உடல், உள சிரமங்களின் மத்தியில் இக்கல்லூரியில் நுழைந்து, எம்மாணவர்களின் சிறப்பான வாழ்க்கைக்காகச் சேவைபுரிகின்றார்கள். 1990ம் ஆண்டு தொடக்கம் செல்லும் இடம் எல்லாம் புனருத்தாரண வேலைகளில் ஈடுபடுவதும், இடம்மாற்றங்கள் செய்வதும் அதிபர்களது பணிகளில் தலையாய பணியாக இருந்துள்ளது. இன்றுவரை இந்நிலை தொடர்கின்றது.

இந்த பொன்விழா பரிசுத்தினமானது 1995ஆம் ஆண்டு கொண்டாடப்படவேண்டியது. அதனைப் பெருமளவுக்குச் சிறப்பாகக் கொண்டாடுதற்கான முன்னோடி ஆயத்தங்கள் யாவும் அன்றைய அதிபர் சு. கலாதரன் அவர்களினாலும் பழையமாணவர் சங்கத்தினராலும் எடுக்கப்பட்டன. அக்காலப்பகுதியில் ஏற்பட்டபெரும் இடப் பெயர்வு அதனைச் செய்யவிடாது தடுத்துவிட்டது. தனது சொந்த கல்லூரி மண்டபத்திலேயே கொண்டாவேண்டியநியதி எம் அனைவருக்கும் இருந்துள்ளது. அதன் விளைவே இன்றைய நிகழ்வு. இந்தவேளையில் இக்கல்லூரியின் கல்விப்பணிக்காகவும், பௌதீகவளர்ச்சிக்காகவும் தொண்டாற்றிய அனைத்து அதிபர்களையும் நினைவு கூரத்தக்கது மிகப்பொருத்தமுடையது.

இதன் நிமித்தம் இன்றைய விழாவின் தொடக்க நிகழ்வாக அன்னார்களது உருவப்படங்களை இந்தப் பிரதான மண்டபத்தில் திரைநீக்கம் செய்து கௌரவிப்பதுடன், இன்று எம்முடன் இருப்பவர்களான இரு அதிபர்களையும் இவ்விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வரவழைப்பதில் மனநிறைவு காண்கிறோம். இன்றையதினம் அவர்கள் இருவரும் இங்கு சமூகம் அளித்துள்ளமை எமது கல்லூரியுடன் அவர்கள் கொண்ட பிணைப்பையே காட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# எமது கிளையின் நிர்வாக உறுப்பினர்கள்

## 1992-93 ம் ஆண்டு

போஷகர்கள் - திரு. திருமதி. சுந்தரலிங்கம்
தலைவர் - திரு. யா. பாலகிருஷ்ணன்
செயலாளர் - திரு. செ. காசிலிங்கம்
பொருளாளர் - திரு. நா. மகேந்திரன்
உப தலைவர் - திரு. த. சந்திகுமார்
உப பொருளாளர் - திரு. க. வாசுதேவன்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - திரு. யா. பத்மநாதன்
திரு. அ. தேவதாசன்
திரு. சு. கருணாநிதி
திரு. இ. சிறீதரன்
திரு. இ. இராசலிங்கம்

## 1994ம் ஆண்டு

போஷகர்கள் - திருமதி. இ. சுந்தரலிங்கம், திரு. வி.ரி. இளங்கோவன்
கணக்குப் பரிசோதகர் - திரு. சி. காராளபிள்ளை
தலைவர் - - திரு. யா. பாலகிருஷ்ணன்
செயலாளர் - திரு. செ. சிறீதரன்
பொருளாளர் - திரு. க. குகநேசன்
உப தலைவர் - திரு. த. சந்திகுமார்
உப பொருளாளர் - திரு. க. சந்திரசேகரன்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - திரு. நா. மகேந்திரன்
திரு. க. பாலமூர்த்தி
திரு. யா. பத்மநாதன்
திரு. சி. பாலச்சந்திரன்
திரு. க. விக்னேஸ்வரன்

## 1995 -96 ஆண்டு

போஷகர்கள் - திரு. சி. காரளபிள்ளை, திருமதி. இ. சுந்தரலிங்கம்
கணக்குப் பரிசோதகர் - திரு. ப. சுந்தரலிங்கம்
தலைவர் - திரு. யா. பாலகிருஷ்ணன்
செயலாளர் - திரு. செ. சிறீதரன்
பொருளாளர் - திரு. க. குகநேசன்
உப தலைவர் - திரு. த. சந்திகுமார்
உப பொருளாளர் - திரு. க. சந்திரசேகரன்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - திரு. யா. பத்மநாதன்
திரு. இ.தயாநந்தன்
திரு. செ. ஸ்ரீதரன்
திரு. செ. காசிலிங்கம்
திரு. சு. சத்தியதர்மபாலா

## 1997ம் ஆண்டு

போஷகர்கள் - திரு. சி. காரளபிள்ளை, திருமதி. இ. சுந்தரலிங்கம்
கணக்குப் பரிசோதகர் - திரு. ப. சுந்தரலிங்கம்
தலைவர் - - திரு. யா. பாலகிருஷ்ணன்
செயலாளர் - திரு. சு. கருணாநிதி
பொருளாளர் - திரு. க. விக்னேஸ்வரன்
உப தலைவர் - திரு. செ. சிறீபாஸ்கரன்
உப செயலாளர் - திரு. அ. தேவதாசன்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - திரு. யா. பத்மநாதன்
திரு. சு. சத்தியதர்மபாலா
திரு. க. விக்னேஸ்வரன்
திரு. இ. தயானந்தன்
திரு. செ. பாஸ்கரன்

படிப்பகம்

www.padippakam.com

## 1998ம் ஆண்டு

போஷகர்கள் - திரு. திருமதி. இ. சுந்தரலிங்கம், திரு. செ. தவவிநாயகம்
கணக்குப் பரிசோதகர் - திரு. ப. சுந்தரலிங்கம்
தலைவர் - திரு. யா. பாலகிருஷ்ணன்
செயலாளர் - திரு. சு. கருணாநிதி
பொருளாளர் - திரு. அ. தேவதாசன்
உப தலைவர் - திரு. செ. ஸ்ரீபாஸ்கரன்
உப செயலாளர் - திரு. செ. சுந்தரலிங்கம்
உப பொருளாளர் - திரு. ப. கந்தப்பிள்ளை

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் - திரு. யா. பத்மநாதன்
திரு. இ.தயானந்தன்
திரு. சு. சத்தியதர்மபாலா
திரு. செ. காசிலிங்கம்
திரு. செ. தேவன்

## 1999 ம் ஆண்டு

போஷகர்கள் - திரு. திருமதி. இ. சுந்தரலிங்கம், திரு. செ. தவவிநாயகம்
கணக்குப் பரிசோதகர் - திரு. செ. ஸ்ரீதரன்
தலைவர் - திரு. அ .இயல்வாணன்
உப தலைவர் - திரு. செ. ஸ்ரீபாஸ்கரன்
செயலாளர் - திரு. அ. தேவதாசன்
பொருளாளர் - திரு. சு. கருணாநிதி
உப செயலாளர் - திரு. செ. சுந்தரலிங்கம்
உப பொருளாளர் - திரு. ப. கந்தப்பிள்ளை

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திரு. யா. பத்மநாதன்
திரு. க. வரதராஜா
திரு. நடா சிவராசா
திரு. செ. தேவன்
திரு. சுந்தரலிங்கம்

# நடப்பாண்டு நிர்வாகிகள்





அ.தேவதாஸ், ப.கந்தப்பிள்ளை, யா.பத்மநாதன், செ.சுந்தரலிங்கம், அ.இயல்வாணன், செ.பாஸ்க்கரன், செ.தேவன், சு.கருணாநிதி, எஸ்.வரதராசா, யா. பாலகிருஷ்ணன், படத்தில் இடம் பெறாதவர், நடா.சிவராசா.



படிப்பகம்

www.padippakam.com

# எமது கல்லூரியில் செயற்படுத்தப்படுகின்ற இன்றைய செயற் திட்டங்கள்

## போஷாக்கு உணவுத் திட்டம்

நோக்கம் :- * மாணவர்களில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்தமையினால் மலேரியா, நெருப்புக் காய்ச்சல் நோய்களினால் அடிக்கடி பாதிக்கப்படுவதால் உடல் நலம் குன்றியமை.

* வருமானம் குறைந்த குடும்பங்களில் உள்ளமையினால், போஷாக்கு உள்ள உணவு இன்மை. இதனால் கல்வியில் விளையாட்டுக்களில் ஊக்கம் குறைந்தவர்களாக உருவாதல்.

செயற்திட்டம் :- * போஷாக்கு உணவு குறைந்தது 3 மாதங்களாவது கொடுத்து கல்வியில் ஊக்கமளித்தல்.

**போஷாக்கு உணவு பெற்றுக் கொள்ளல் அல்லது தயாரித்துக் கொள்ளல்**

கண்டாக்கிளை செயற்படுத்த உள்ளது

செலவுகள் :- உழுந்து, பயறு, கடலை, சோயா அவரை போன்ற தானியங்களில் செய்யப்படும் மாவு,

| | |
|---|---|
| ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு | 3.00 |
| மூன்று மாதங்களுக்கு | 180.00 |
| 100 மாணவருக்கு | 18 000.00 |
| 200 மாணவருக்கு | 36 000.00 |

## ஆசிரியர்களுக்கு ஓரளவு வசதியுள்ள ஓய்வு அறையை ஏற்படுத்தல்

நோக்கம் :- * தற்போது ஆசிரியர்களில் பெரும்பாலோர் தூர இடங்களில் இருந்து நாள் தோறும் வருபவர்களாக உள்ளமை.

* இவர்கள் தமது ஓய்வான பாடவேளையில் தங்கி உணவருந்தி, நூல்கள் வாசிக்க, வேறு கருமங்கள் ஆற்ற வேண்டியமை

(நீங்கள் வெளி நாடுகளில் கல்லூரிகளில் இவற்றை பார்த்து இருப்பீர்கள். அதுபோல் ஒரு சிறு அளவிலான வசதிகளை ஏற்படுத்தல். இந்த வசதிகளையும் எமது சொந்த கட்டிடத்துக்கு கொண்டு செல்லலாம்.)

செயற்திட்டம் :-

| | | |
|---|---|---|
| கைப்பிடியுள்ள கதிரைகள் | - | 10 |
| நீர் வடிகட்டி | - | 01 |
| நீர் சூடாக்கி | - | 01 |
| கண்ணாடி | - | 01 |
| மின்விசிறி | - | 01 |

செலவுகள் :-

| | |
|---|---|
| கைப்பிடி கதிரைகள் | 2000.00 |
| நீர் வடிகட்டி | 3000.00 |
| நீர் சூடாக்கி | 1500.00 |
| கண்ணாடி | 1000.00 |
| மின் விசிறி | 4500.00 |

படிப்பகம்

www.padippakam.com

**கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு முதல் மொழி, கணிதம் பாடங்களில் மேலதிக வகுப்புக்கள் நடத்துதல் (6 மாதங்களுக்கு)**

நோக்கம் :- * கல்லூரி மாணவர்களில் அதிகமானோர் தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் மிகக் குறைந்த அடைவையே பெற்றுள்ளமை.

* கல்வி அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்கல். (பிழையற எழுத, வாசிக்க அறிவு ஊட்டல்)

கடந்த 7 வருடங்களாக இடம்பெயர்ந்து அலைந்தமையினால் முறையாக பாடசாலைக்கு செல்லாமை, முறையாக கற்காமை, இடம் பெயர்ந்த காலத்தில் பெற்றோரின் பொருளாதாரக் கஷ்டங்களினால் கல்வியில் கூடிய அக்கறை காட்டாமை.)

செயற்திட்டம் :- * குறைந்தது 2 ஆசிரியர்களையாவது நியமித்து இவர்களுக்கு பாடசாலை நேரத்திற்கு புறம்பாக மேலதிக வகுப்புக்களை நடாத்துதல்.

* காலை, மாலை நேர வகுப்புக்கள் நடாத்துதல்.

செலவுகள் :-

| | |
|---|---|
| ஆசிரியரின் மேலதிக ஊக்குவிப்புச் சம்பளம், | |
| குறைந்தது ஒருவருக்கு | 1500.00 |
| 6 பேருக்கு | 9000.00 |
| மாணவர்களை ஊக்குவிக்க, (சிற்றுண்டி, பணிஸ்/பாண்) | |
| ஒருவருக்கு | 24.00 |
| 100 மாணவர்களாயின் | 2400.00 |
| 6 மாதங்களுக்கு | 14,400.00 |
| எழுது கருவிகள், கொப்பிகள் | 3000.00 |

பிரான்ஸ் கிளை மூலம் செயற்படுத்தப்படுகின்றது



மொழித் திறன் விருத்தி குறைந்த மாணவர்கட்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது. செல்வி. சிவபாதசுந்தரம். சிவபூசணி ஆசிரியை கற்பிப்பதையும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.S.விக்னேஸ்வரன் அவர்கள் கவனிப்பதையும் காணலாம்.

வறிய மாணவர்கட்கு உதவித் திட்டம்

நோக்கம் :- * எமது பாடசாலையில் கற்கும் பொருளாதார வசதிகள் குறைந்த மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்கி, கல்வி முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்க

* யாழ் பாடசாலை மாணவரின் தரத்திற்கு எம் மாணவர்களை உருவாக்கல் (குறைந்தது 100 மாணவர்கள்)

செயற்திட்டம் :- * கொப்பிகள், எழுது கருவிகள், உபகரணங்கள் போன்றவற்றை பெற்றுக் கொடுத்தல். சப்பாத்து (காலணி) போன்றவற்றைக் கொடுத்தல்.

செலவுகள் :-

| | |
|---|---|
| சப்பாத்துக்கள் | 20 000.00 |
| கழுத்துப்பட்டி | 2 500.00 |
| கொப்பிகள் எழுது கருவிகள் | 5 000.00 |

## மாணவருக்கு கற்கைக்கு வேண்டிய கட்புல, செவிப்புல எலக்ரோனிக் உபகரணங்கள் ஏற்படுத்தல்

நோக்கம் :- * மாணவர்களில் அநேகர் புற உலகு பற்றிய அறிவற்றவர்களாக இருக்கின்றனர். வானொலி, தொலைக்காட்சி போன்ற செய்தித் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவைத் தேடிக் கொடுக்க.

* தற்கால கல்வியில் குறிப்பாக 21ம் நூற்றாண்டு நோக்கிய கல்வியில் எல்லாம் எலக்ரோனிக் சாதனங்கள் நோக்கியதாக இருக்கின்றமை.

செயற்திட்டம் :- வானொலி தொலைக்காட்சி, டெக், கணனிகள் ஆகியவற்றில் ஏதாவது எமது கல்லூரி பெற்றுக் கொள்ளல்.

செலவுகள் :-

| | | |
|---|---|---|
| வானொலி (ரேப்பதிவு உள்ளது) | 01 | - |
| தொலைக்காட்சிப் பெட்டி | 01 | - |
| டெக் | 01 | - |

கணனி (அரசினால், கல்வித் திணைக்களத்தால் கிடைக்க இருக்கிறது)
மின்சார வசதி (வேலணைக்கு காலை 6.00 மணி - 12.30 வரை மின்சாரம் உண்டு.) தற்காலிகமாக இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

## புலமைப் பரிசில் திட்டங்களை ஏற்படுத்தல்

நோக்கம் :- * க.பொ.த. (சா.த), (உ.த) இல் மிகத் திறமையாக சித்தியடைந்து எமது கல்லூரியில் தொடர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு ஞாபகார்த்த பரிசில்கள் வழங்குதல்.

* தற்போது இங்குள்ள மாணவர்கள் பெரும்பாலும் பொருளாதார வசதி குறைந்த, கல்வியில் ஊக்கம் குறைந்த பெற்றோரின் பிள்ளைகளே.

* இங்கிருந்து திறமையாக க.பொ.த. (சா.த) திறமையாக சித்தி எய்திய மாணவர்கள் வளம் கூடிய நகரப் பாடசாலைகளை நோக்கி செல்லாமல் தடுத்தல்.

செயற்திட்டம் :- * எமது கல்லூரி அதிபர்களின் ஞாபகார்த்தம். ( அமரர் கந்தையா தம்பு, சண்முகநாதன், கேதாரநாதன் அவர்களின் பெயர்கள்)

* கல்லூரியின் ஆசிரியர்களின் ஞாபகார்த்தம்

* பழைய மாணவர்கள் தமது பெற்றோர், அல்லது உறவினர்கள் பிரியமானவர்களின் ஞாபகார்த்தம்.

இவற்றுக்கு இலங்கை வங்கி, ஊர்காவற்துறை, வேலணையில் ஒவ்வொருவரின் பெயரிலும் வைப்பு நிதிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் இருந்து மாதாமாதம் வட்டியினைப் பெற்று புலமைப் பரிசிலுக்கு உரிய மாணவருக்கு உதவியாக வழங்கலாம். அல்லது வருடா வருடம் நடைபெறும் பரிசளிப்பு விழாவின் போதும் ஞாபகார்த்த பரிசில்கள் வழங்கலாம். ( இவை என்றும் நிலைத்து இருக்கக் கூடியது)

தற்போது கொழும்பு பழைய மாணவர் சங்கம் அமரர் தம்பு அதிபர் அவர்கள் பெயரால் கொழும்பு வங்கியில் வைப்புச் செய்து 1998 ஜனவரியில் இருந்து இ. விஜயதீபன் என்ற மாணவர்க்கு கொடுக்க இருக்கிறார்.

திருமதி. தி. கேதாரநாதன் அவர்கள் முயற்சியால்,

திரு.பொ.கேதாரநாதன்
திரு.இ.மருதையினார்
திருமதி.சி.சொர்ணம்மா
திரு.ச.சிதம்பரப்பிள்ளை

இவர்களின் பெயரால் ஞாபகார்த்த நிதிகளுக்கான வங்கியில் கணக்கு திறக்கப்பட்டு உள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

www.padippakam.com

## கல்லூரி நூல் நிலையத்தை விரிவாக்கல்

நோக்கம் :- * இடம் பெயர்ந்து சென்றதினாலும், இராணுவ நடவடிக்கை காரணமாகவும் அழிவுற்ற நூலகத்தை சீராக்க,

* மாணவர்களின் வாசிக்கும் ஆற்றலை வளர்க்க,

* இன்று வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசித்து பொது அறிவை வளர்க்க,

* எதிர்காலத்தில் சொந்த இடத்திற்கு கொண்டு செல்லக் கூடியதாக அமைக்க,

செயற்திட்டம் :- * ஒரு வகுப்பறையை தற்காலிக நூல் நிலையமாக மாற்றுதல்.

* இடம் மாறும் போது கொண்டு செல்லக் கூடிய முறையில் குறைந்தது நான்கு (4) அலுமாரிகளையாவது பெற்றுக் கொள்ளுதல்.

* நூல்கள், சஞ்சிகைகள் உட்பட மாணவருக்கு அவசியமான அனைத்துப் பத்திரிகைகளையும் பெற்றுக் கொள்ளல்.

* நூலகர் ஒருவரை நியமித்தல்.


செலவுகள் :-

| | | |
|---|---|---|
| அலுமாரிகள் (4) | | 30,000.00 |
| நாளாந்த பத்திரிகை (600) (வருடத்திற்கானது) | | 7,200 |
| (குறைந்தது 3) | (12) | |
| மாத சஞ்சிகைகள் | 15,000 | |
| புத்தகக் கொள்வனவு | | 30,000 |
| நூலகர் சம்பளம் | | 12,000 |

பிரான்ஸ் கிளை மூலம்
செயற்படுத்தப்பட்டது



கல்லூரியின் நூல் நிலையத்தை கோட்டக்கல்வி அதிகாரி திரு.S.நிமலநாதன் அவர்கள் மங்கள விளக்கேற்றி தொடங்கி வைப்பதையும் யாழ்.வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.S.விக்னேஸ்வரன் அவர்கள் நடுவில் நிற்பதையும் அதிபர் அவர்களையும் காணலாம்.




நூல் நிலையத்தை யாழ் வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.S. விக்னேஸ்வரன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைக் காணலாம்.



நூல் நிலையத்தின் உட்பகுதியை கல்வி அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

படிப்பகம்

## உள்ளக விளையாட்டுக்களை ஊக்கப்படுத்தல்

நோக்கம் :- * எமது மாணவர்களின் உடல், உள மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்க,
* பெண்களுக்கு வலைப்பந்தாட்டம், ஆண்களுக்கு கரப்பந்தாட்டம் மற்றும் மேசைப்பந்தாட்டம், சதுரங்க (செஸ்), கரம் போட் போன்ற உள்ளக விளையாட்டுக்கள் ஏற்படுத்தல்.

(எமது மாணவர்கள் உதைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ் மாவட்ட பாடசாலைகளுடன் நிகராக விளையாடி வருகின்றார்கள். அவர்களை ஊக்குவிப்பது அவசியம்)

செயற்திட்டம் :- * மாணாவர்களுக்கு பல்வேறு விளையாட்டுக்கள் பற்றிய பயிற்சிகள் கொடுத்தல்.
* மாவட்ட, மாகாண பாடசாலைகள் மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்ற ஊக்கமளித்தல்.

பிரான்சுக் கிளை மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

செலவுகள் :-
கரம் போட்டுகள் -
செஸ் போட்டுகள் -
மேசைப் பந்து மேசை -
ஏனைய விளையாட்டுப் பந்துகள் -

## திராவிட மொழிக்குடும்பம்

திராவிட மொழிக்குடும்பம் 12 கொண்டது என்றும், அவற்றுள் ஆறு திருந்தியவை, ஆறு திருந்தாதவை என்றும் டாக்டர் கார்ட்டு வெல் தமது ஒப்பியல் மொழி நூலில் கூறியுள்ளார். நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட நூல் அது. தற்பொழுது அக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் இன்னும் சில உள்ளன என்பது வெளிப்பட்டிருக்கிறது. அவை ஏறத்தாழ இருபத்தொன்று ஆகும்.

| | |
|---|---|
| தமிழ் | படகா |
| தெலுங்கு | கதபா |
| கன்னடம் | கோலாமி |
| மலையாளம் | மால்தோ |
| கோண்டி | பர்ஜி |
| துளு | கொண்டா |
| குருக் | நாய்கி |
| குவி | தோடா |
| பிராகூய் | ஒல்லாரி |
| கூகி | கோடா |
| கொடகு | |

www.padippakam.com

யா/ சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் - வேலணை
J / Sir Waitialingam Duraiswamy Madhya Maha Vidyalayam - Velanai

# பழைய மாணவர் சங்கம்
# Old Students' Association

Your No:
Our No:

VELANAI,
SRI LANKA.

**Patron:**
Mr. S. A. E. Ekanathan
*Additional Magistrate*
Prof. P. Balasundarampillai
*Vice Chancellor, University of Jaffna.*
Mr. C. Rajanayagam
*Retd. Principal*
Mrs. T. Ketharanathan
*Retd. Deputy Principal*
Mr. E. K. Nagarajah
*Retd. Senior Teacher*

**President:**
Mr. K. Ganesalingam
*Principal*

**Vice Presidents:**
Prof. S. Balachandiran
*Dean, Arts University of Jaffna*
Prof. Ra. Sivachandran
*University of Jaffna.*
Mr. K. Balakrishnan
*Deputy Director of Planing*
Mr. S. Ratnam
*A. G. A Velanai*
Mr. V. Thavachelvam J. P.

**Secretary:**
Mr. J. X. Selvanayagam
*A. G. A, Kayts*
**Asst. Secretary:**
Miss. K. Sumathy
**Treasurer:**
Mr. S. T. Mahalingam
*Retd. Post Master*

**Committee Members:**
Mr. P. Eesan
Mr. P. Arunakirinathan
Mr. T. Kumarasamy
Mr. S. Balendran
Mr. S. Shanmugalingam
Mr. E. Sivanathan
Mrs. P. Logeswary
Mr. S. Sundaralingam
Mr. S. Saravananathan
Mr. P. Arooran
Mrs. V. Arasaratnam
Mr. V. Ganesan

20.10,99

தலைவர்/செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
பிரான்ஸ் கிளை,
பிரான்ஸ்

அன்புடையீர்!

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 25.09.99 அன்று நடைபெற்றது. அப்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கையையும் இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். பாடசாலைக்கு நீங்கள் செய்கின்ற பணிகள் மேலும் தொடர்ந்து எமது மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் பாடசாலையின் பொன்விழாவை எமது சொந்தக் கட்டடத்திலேயே நடாத்துவது என்றும் 01.11.99 அன்று பொன் விழா ஞாபகார்த்த பரிசளிப்பு விழாவை நடாத்துவதன் ஊடாக பொன்விழாவை ஆரம்பித்து வைப்பது என்றும் அதனைத் தொடர்ந்து மூன்று மாதகால இடைவெளிக்குள் பொன்விழா மலர் ஒன்றை ஆக்கி பொன்விழா மலர் வெளியீட்டு வைபவத்தை நடாத்துவது என்றும் திட்டமிட்டுள்ளோம்.

எனவே இவ்விழாக்கள் சிறப்படைய உங்கள் பங்களிப்பை நாடுகின்றோம். பொன்விழா மலர் வெளியிடப்பட இருப்பதால் அதில் பிரசுரிப்பதற்கு தங்கள் சங்க அங்கத்தவர்கள் அடங்கிய புகைப்படங்களையு சங்க அறிக்கைகளையும் அனுப்பி வைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம். இது தொடர்பாக மலர்க்குழு தங்களுடன் தொடர்பு கொள்ளும்.

மேலும் எமது பாடசாலையின் பொன்விழா ஞாபகார்த்தமாக பின்வரும் புனரமைப்பு வேலைகளைச் செய்யலாம் எனத் தீர்மானித்துள்ளோம்.

1. விஞ்ஞான கூட புனரமைப்பு
2. நூல் நிலைய புனரமைப்பு
3. கணனி அறை
4. பாடசாலை ஒன்று கூடல் மண்டபம் புனரமைப்பு
5. ஆசிரியர் ஓய்வு அறை புனரமைப்பு
6. மனைப்பொருளியல் கூட புனரமைப்பு

இவற்றுள் தங்கள் சங்கம் சார்பாக புனரமைப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். நீங்கள் இதற்கு அன்பளிப்பு செய்ய இருக்கும் நிதியை எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை கிளை கணக்கு இலக்கம் 7037 க்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் சேவை உயர வாழ்த்துக்கள்

நன்றி.

ஒப்பம். ஜே. எக்ஸ். செல்வநாயகம்
செயலாளர்

அதிபர்.

படிப்பகம்

www.padippakam.com

**வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளை ஆரம்பிக்கப்பட்டு ஒரு தசாப்தத்தினை எட்டிக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது செயற்பாடுகளை ஒரு கணம் திரும்பிப்பார்க்கின்றோம்**

* வேலணை மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபரும் நீண்ட கால ஆசிரியருமான திரு. பொ. கேதாரநாதன் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க எமது பாடசாலையின் பழைய மாணவரும் கிருஷ்ணா அச்சக அதிபருமான திரு. யா. பாலகிருஷ்ணன் அவர்களால் பாரீசில் அங்குரார்ப்பணக் கூட்டம் கூட்டப்பட்டது.
08 - 11 - 1992 இல் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள், இளைப்பாறிய ஆசிரியர்கள் உட்பட 28பேர் கலந்துகொண்டார்கள்.

* 24 - 03 - 1993 முதல் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை இலாப நோக்கற்ற நலன்புரிச் சங்கமாக பிரான்ஸ் அரச அங்கீகாரம் பெற்று இயங்கி வருகிறது.

* 16 - 04 - 1993 இவ்வாண்டில் அங்கத்தவர்கள் பரவலாக சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி 11910F00 பிராங்குகள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டது. இப்பணம் பாடசாலை இடம்பெயர்ந்து அரசடி வீதியில் பாடசாலை இயங்கிய போது கொட்டகை அமைக்கவும் தளபாடம் வாங்கவும் பயன்படுத்தப்பட்டது. யாழ் அரசடிவீதியில் பாடசாலை அமைக்க காணியை வழங்கி உதவி புரிந்த திருமதி. தங்கரத்தினம் இராமச்சந்திரன் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

* 23 - 12 - 1994 அன்று நூல் நிலைய தளபாடங்கள், புத்தகங்கள் கொள்முதல் செய்வதற்காக 8571F00 பிரஞ்சு பிராங்குகள் அனுப்பிவைக்கப்பட்டது.

* 29 - 06 - 1997 அன்று ஒழுக்கம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வும், முன்னாள் பழைய மாணவர்களின் நகைச்சுவைக் கதம்பமும் ஒன்றுகூடலும் இடம் பெற்றது.

* 13 - 01 - 1998 அன்று வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் தற்காலிகமாக எமது பாடசாலை இயங்கிய போது அவ்விடப் பற்றாக்குறை காரணமாக புதிய கொட்டகை தளபாடங்கள் வாங்கவும் 5300 பிரஞ்சுப் பிராங்குகள் அனுப்பி வைக்கப்பட்டது.

* 08 - 06 - 1998 அன்று ஐந்தாவது ஆண்டு நிறைவாக வித்தியாலய விழா நடைபெற்றது. வித்தியாலய விழாவில் 5வது ஆண்டு சிறப்பிதழ் “வித்தியாலயம்” வெளியிடப்பட்டது. விழாவில் பரத நாட்டியம், சிறுவர் நடனம், “அபஸ் சுரங்கள்”, “தர்ம மகாராஜா” நாடகம், New Friends இன் மேற்கத்திய நடனமும் இடம் பெற்றது. பாடசாலையின் இளைப்பாறிய அதிபரும் பழைய மாணவருமான திரு.சி. காராளப்பிள்ளை பிரதம பேச்சாளராக கலந்து கொண்டார். 5வது ஆண்டு நினைவாக வெளியிட்ட “வித்தியாலயம்” நூலினை பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியை திருமதி. சுந்தரலிங்கம் அவர்களிடம் இருந்து பாடசாலையின் பழைய மாணவரும், பிரான்சில் இருந்து வெளியாகும் “சுட்டு விரல்” பத்திரிகையின் ஆசிரியருமான திரு. இயல்வாணன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வுகளை பாடசாலையின் பழைய மாணவரும் (T.R.T.) பிரான்சிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் தொலைக்காட்சி, வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் திரு. ஏ.எஸ்.ராஜா தொகுத்து வழங்கினார்.

* 27 - 08 - 1998 அன்று எமது பாடசாலை சொந்தக் கட்டிடத்திற்கு சென்றது.

* 26 - 01 - 1999 கல்வி அபிவிருத்திக்காக மேலதிக வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டு அதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான வேதனத்திற்காக 5000F 00 பிராங்குகள் அனுப்பி வைக்கப்பட்டது.

* 30 - 12 - 1999 அன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 6000 F 00 பிராங்குகள் அனுப்பி வைக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# கல்வித் தாய் வாழ்த்து

வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய் - வாழிய
வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்

கடல் சூழ் தீவகத்தின்
கருவறையில் வந்துதித்த
கலைமகளாம் எங்கள் திருமகளாம்
வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்
வாழிய.....

பயிர் வளமும் பனை வளமும்
தெங்கு பொருள் கடல் வளமும்
சேர்ந்தமைந்த பூமிதனில்
ஒளியேற்ற வந்தவள் தான்
வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்
வாழிய.....

ஏழ்தீவின் இளந்தளிரை
ஏற்ற முறச் செய்தாலும்
எல் லோரையும் ஆதரித்து
அறி வாட்சி செய்பவள் தான்
வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்
வாழிய.....

தமிழோடு ஆங்கிலத்தை
தக்க படி பயிற்று வித்தே
தரணி எங்கும் தன் குழந்தை
தலை நிமிர்ந்து வாழ வைத்தாள்
வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்
வாழிய.....

ஆன்மிக நெறி சிறக்க
அழகு நடராச னவன்
ஆலயமும் தான் சேர்த்தே
அருளாட்சி செய்பவள் தான்
வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்
வாழிய.....

கணனி யொடு கவின் கலைகள்
கற்று நாம் தேறு தற்க்கு
களமாய் அமைந்தவளை
போற்றித் துதித்திடுவோம்
வாழிய வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்
வாழிய வேலணை மத்திய மகா வித்தியாலயத் தாய்

செல்லையா - தேவன்
1974 - 82

படிப்பகம்

www.padippakam.com

# 'வேலணை மத்திய தீபம்'

பரந்த இவ்வுலகில் இரத்தினதுவீபம் என அழைக்கப்படும் இலங்கையென்ற ஸ்ரீலங்காத் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் தீந்தமிழ் பகுதியில் அழகொளிரும் தீவுப்பகுதியில் பனை வளம், புகையிலை வளம் சிறந்தோங்குகின்ற பதி, வேலணைப் பதியாகும். ஐந்தாம் குரவர் ஆறுமுக நாவலரால் கட்டிக் காக்கப்பட்ட சைவமும் செந்தமிழ் மொழியும் இங்கும் போற்றி வளர்க்கப்பட்டது. இவ் எழில் வளம் மிக்க தீவுகளின் இருதயமாகக் கருதப்பட்ட வேலணை என்ற பகுதியில் கல்வி என்ற பயிருக்கு நீரோச்சும் நதியாக கற்றவர்களின் கலங்கரை விளக்காக திகழ்ந்து வருவதே வேலணை மத்திய மகா வித்தியாலயம் என்ற கல்விச் சாலை.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றயவை"

என்ற தெய்வப் புலவர் வாக்கிற்கிணங்க கல்விக்கு ஊற்றாக விளங்குவது இக் கல்வி ஆலயமாகும். ஆம் சென்ற ஒரு நூற்றாண்டுகளாக பல்கலைக் கழகப் பேராசிரியர்களையும், அலை கடல் தேடி அறவழிநாடி பொருட்செல்வம் துய்த்து வரும் வேலணை மண் ஈன்ற மைந்தர்களையும் இலங்கை அரசியல் நெறிக்குத் தூண்களாக விளங்கிய சபாநாயக்கர் முதல் பாராளுமன்ற உறுப்பினர்களையும், வைத்திய நிபுணர்களையும், பொறியியலாளர்களையும் தன் கண்மணிப் புதல்வர்களாகப்பெற்றது வேலணை மத்திய கல்லூரி. இக் கல்லூரி ஸ்தாபகர் சபாநாயக்கரை ஈன்ற தாய் என்பதால் மகன் தாய்க்குத் தன் பெயரையே சூட்டி சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயம் என்ற புகழ் பூத்த அணிகலனைத் தற்போது சூட்டி மகிழ்ந்தான்.

இவை மட்டுமல்லாது இங்கு விஞ்ஞானக் கல்வி பெற்ற அமரர் கேதாரநாதனின் ஆசிரிய சேவையில் உலகின் பல பகுதியில் விஞ்ஞானிகளாக, ஆங்கில அறிவினால் அல்வினஸ் எனும் ஆசானால் அவனி போற்றிட சர்வதேச நிபுணர்களாக மிளிர்கின்றனர்.

இத் தாயின் தாயாக வழிவழி வந்த பரம்பரைச் சந்ததியாக நாவலர் வழியில் கல்விச் சாலைகள் சமைத்த அமரர் கந்தப்பு வாத்தியாரின் சைவப்பிரகாச வித்தியாசாலை மூல வேராக ஆரம்பக் கல்விக்கு அத்திவாரம் இடும் அரும் கல்விச்சாலையாக அன்றிலிருந்து இன்று வரை தன்னிகரில்லாது விளங்குகிறது.

"தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

என்ற செந்நாப் புலவர் வாக்கின் படி இன்றும் சளைக்காமல் தன் கல்விச் சேவையை அதிபர் திருமிகு.கு.கணேசலிங்கம் அவர்களின் அயராத நிர்வாகத் திறனால் திறம் பட வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மனிதனையும் பூரண வாழ்வுக்கு ஆயத்தம் செய்வதே கல்வி. இதனை முறையாக சரியான வழிகாட்டலுடன் ஆசிரிய மணிகள் என்ற மலர்களால் சூடப்பட்டு தனக்கே உரிய எழிலுடன் காட்சியளிப்பவளே எம் வேலணை மத்திய கல்லூரி.

இக் கல்லூரியில் அருமந்த மைந்தர்களாம் அறிவு ஜீவிகள் அனுதினமும் தம்மையீன்ற பெற்ற தாயையும், பிறந்த பிரதேசத்தின் மண்ணையும் மறவாமல் வாழ்வது போல் தம் அன்னைக்கு நிகரான கல்வி அன்னையின் சாலைக்கு நினைவு கூர்ந்து விழா எடுப்பதென்றால் எவராலும் போற்றிப் பாராட்டக் கூடியது. அந்த வகையில் பாராண்ட பைந்தமிழ்க் குடியில் வந்த எம் பாரிஸ் நகர உடன் பிறப்புக்களை நாமும் வேலணை மண்ணின் மைந்தர்களாய் சகோதர உள்ளத்துடன் மனதார வாழ்த்தி வாயாரப் போற்றுகிறோம்.

"இமயத்தில் கொடி நாட்டினான் சேரன், எம் எழில் வேலணை மண்ணின் மைந்தர்கள் மதியினால் கடல் வளம் நாடி கப்பல் ஏறி பாரோர் புகழும் பாரிசினிலே பைந்தமிழ் வளர்த்த வேலணை அன்னை மத்திய கல்விச் சாலைக்கு விழா எடுத்தனர். அவர்கள் புகழ் ஓங்குக"

நன்றி

(வேலணை பாலா)
ப.பாலசுப்பிர மணியம்,
கல்வி அலுவலகம்
நிதித்துறை
வலிகாமம், யாழ்ப்பாணம்
இலங்கை

www.padippakam.com



# அன்பு வழி வெற்றிகண்ட அதிபர் குணபாசிங்கம்

செ.தேவன்
சரவணை

ஒரு பாடசாலையின் கற்றல், கற்பித்தல் மற்றும் பண்பாடு அனைத்தும் நல்ல முறையில் அமையப் பெற வேண்டுமாயின் ஆசிரியர் குலாம் வந்து வாய்க்கப் பெற்றால் மட்டும் போதாது அதிபர் ஆற்றல் மற்றும் ஆளுமை பண்புகள் வாய்ந்த தன்னலம் கருதாத ஒருவராக வந்து அமையப் பெற வேண்டும். அங்ஙனம் வந்து அமைந்தவரே அதிபர் குணபாலசிங்கம் அவர்கள்.

இவர் எழுபதுகளிலிருந்து எண்பதுகள் வரை ஒன்பது ஆண்டுகள் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கால் பதித்தமை எமது பாடசாலை பெற்ற பேறுகளில் ஒன்று என்றால் மிகையாகாது. இக்காலப் பகுதியில் இவர் ஆற்றிய பணி மறக்க முடியாததும் போற்றுதற்குரியதும் ஆகும். இவர் காலப் பகுதியில் கல்வி கற்ற மாணவர்கள் இன்றும் அவரை நினைந்து பெருமை கொள்வதை காண முடிகிறது.

வெள்ளை வெளேரென்ற உடை அவரின் உளத்தூய்மையை எடுத்துக் காட்டுவது போல் அமைய நிமிர்ந்த நன்நடை, நேர்கொண்ட பார்வை அனைத்தும் அவரது ஆளுமையின் வெளிப்பாடுகளாக திகழ பாடசாலைக்கு வரும் அவரது தோற்றம் அலாதியானது.

அன்பாக பேசும் சுபாவத்திற்க்கு ஏற்ப கண்டிப்பும் உடையவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் தனக்கே உரிமையாக்கி மகிழ்ந்தவர். பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னதாகவே வரும் அவர் பாடசாலை முடிந்த பின்னர் மாணவரை வழியனுப்பி செல்வதைப் போல் காலம் தாமதித்தே வீடு செல்வார்.

பாடசாலையில் பயிலும் மாணவர்கள் அனைவரையும் உன்னிப்பாக கவனிப்பார். அதிபர் தன்னைக் கவனிக்கிறார் என்று அறியாது தவறு செய்து தண்டனை பெறும் மாணவர்களும் உண்டு. ஆசிரியர் வகுப்பறையில் படிப்பித்துக் கொண்டிக்கும் போது கூட தன் பார்வையை செலுத்த தவறுவதில்லை. வகுப்பறையில் ஆசிரியர் இல்லையாயின் என்ன பாடம் உங்களுக்கு என்று கேட்பார். ஆசிரியர் வந்திருந்தால் உடனே சென்று கூட்டி வரும்படி பணிப்பார்.

கடமையை சரிவரச் செய்யாத ஆசிரியர்களோடு தர்க்கத்திலும் இறங்கி விடுவார். இதனால் பல ஆசிரியர்கள் இவர் மீது வெறுப்பும், ஆத்திரமும் அடைந்ததுண்டு. இவரை தங்கள் மாய வலைக்குள் போட முடியாமல் விழித்தவர்கள் உண்டு. இவரை எப்படியும் இப்பாடசாலையை விட்டு அனுப்ப வேண்டும் என்று நினைத்து மாணவரைத் தூண்டி விட்டவர்கள் உண்டு. அப்போது கூட எய்தவர் இருக்க அம்பை நோவானேன் என்று மாணவரை மன்னித்தமை அவரின் பெரு உள்ளத்தைக் காட்டுகிறது. தம் பிழை உணர்ந்த மாணவர்கள் மன்னிப்புக் கேட்பதற்காக அவர் இல்லம் வரை நாடிச் சென்றனர். இவையெல்லாம் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என வாழ்ந்த அந்த உள்ளத்திற்கு தாக்கம் இல்லை எனினும் மாணவர் உள்ளம் இன்றும் அதை நினைத்து கவலை கொள்வதில் அர்த்தம் இருக்கத் தான் செய்கிறது.

மாணவர்களுக்கு விளையாட்டுக் கல்வியோடு ஆன்மிகக் கல்வியும் தகுந்த முறையில் போதிக்கப்பட வேண்டும். அந்நெறி மூலம் எதிர்காலத்தில் அவர்கள் பண்பட்ட வாழ்க்கை வாழ முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். பாடசாலை ஆலயத்தில் நடைபெறும் பூஜை முதல் திருக்கேதீஸ்வரத்திலும் எமது பாடசாலையின் பெயரில் பூஜை ஒன்று மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பியதோடு அதில் மாணவர்களை பங்கேற்க வைத்த பெருமையும் அவரையே சாரும். அந்த பூஜை நாட்களில் மாணவரோடு மாணவராக ஆகிவிடுவதும் இன்றும் மனக்கண் முன் வந்து நிழலாடுகிறது.

“வித்தியாலயம்” 2000 ஆண்டு மலரில் நான் படித்த காலப் பகுதியில் என் உள்ளத்தைக் கவர்ந்த அந்த அன்பு உள்ளம் கொண்ட அதிபர் குணபாலசிங்கம் அவர்களை என் கண்ணுக்கெட்டிய பார்வையில், நான் அறிந்தவகையில் இந்த மலரில் நினைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# கல்லூாரி நினைவலைகள். . .

இலங்கை சுதந்திரம்பெறுவதற்கு முந்திய அரசாங்க சபையில் கல்வியமைச்சராயிருந்த சி. டபிள்யு. ஈ. கன்னங்கரா அவர்கள் தலைமையிலான கல்விச்சீர்திருத்த குழுவின் அறிக்கையின் பிரகாரம்நாடெங்கும்மத்திய கல்லூரிகள் அமைக்கப்பட்டன. இயன்ற அளவு ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்குமென விரிவு கண்ட இப்பணியில் தீவுப்பகுதியின் நடுவண்ணமாக வேலணை மத்திய கல்லூரி அமையலாயிற்று. பின்னர்இது மத்திய மகா வித்தியாலயம் என பெயர்மாற்றப் பட்டது. எண்பதுகளில் இக் கல்லூரி அமைவதற்குப்பெரிதும் உழைத்தவரும்அரசாங்க சபையில் சபாநாயகராக விளங்கியவரும் வேலணையைச் சேர்ந்தவருமாகிய சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களின் பெயர் இக்கல்லூரிக்கு சூட்டப்பட்டது.

மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்பட்ட தீவகத்தின் வளமிக்க வாழ்வுக்கு ஆதாரமான கல்வியை வழங்குவதில் இக்கல்லூரியின் பங்களிப்பு அளவிடற்கரியது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான வளர்ச்சியையுடைய எமதுகல்லூரி இடர்சூழ்ந்த இருள்கவிந்த இவ்வேளையிலும் இன்றும் கூடத் தன்னாலான பணியினை ஆற்றியே வருகிறது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள். நூறை அண்மிக்கும் ஆசிரியர்கள், 250 மாணவர்கள் தங்கிப்பயிலும் விடுதிவசதிகள், விஞ்ஞானக் கல்வியைக் கற்கக் கூடிய ஆய்வு கூடங்கள், பல்துறைப் பாடங்களுக்குமான தனிப்பட்ட அறைகள் போன்ற அனைத்து வசதிகளுடனும் பாரியகட்டிடவளம், பிரதேசவளம் ஆகியன கொண்டு சிறந்த கற்றல், கற்பித்தல் நடைபெறுகின்ற முன்னோடிக் கல்லூரியாக விளங்கிய பொற்காலத்தைத் தற்போது நினைக்கும்போது நெஞ்சம் விம்முகிறது. பண்பு வழுவாது பணி புரிந்த ஆசிரியர்கள். பல்வேறு துறைகளிலும் சாதனைபடைத்த மாணவர்கள், உவப்பான உறவைப் பேணிய பெற்றோர்கள் ஆகியவர்களின் துணையுடன் தீவகத்தின் கல்விக் கலங்கரை விளக்கமாகத் துலங்கியதன்றோ எங்கள் கல்லூரி. ஆனால் இன்றோ... மக்களை ஏந்தியிருக்க வேண்டிய நாடு மக்களின்றி, வனப்பின்றி, பொலிவுகுன்றி இருக்கின்ற நிலையிலும், ஏறத்தாழ 500 மாணவர்கள் கல்வி கற்கின்ற சூழ்நிலையைக் காணுகின்றோம். மீண்டும் அந்த நன்னாளை எதிர் பார்த்து காத்திருக்கிறோம். எங்கள் வானத்தின் இருளகற்ற இன்னும் திங்கள் வரவில்லை என ஏங்குகின்றோம். இவ்வேளையில் எம்மை உருவாக்கி அறிவொளி பரப்பிய ஆசான்களின் நினைவலைகள் நெஞ்சத்தடாகத்தில் மோதுகின்றன. ஏணிகளாய் தோணிகளாய், எரிகின்ற தீபங்களாய், தம்மையே உருக்கிய மெழுகுவர்த்திகளாய், ஊதுவத்திகளாய் வாழ்ந்த, வாழுகின்ற ஆசிரியப் பெருந்தகைகளை எண்ணி எண்ணி உள்ளம் பெருமிதம் கொள்ளுகிறது. ஆசிரியராய், பதில்அதிபராய் அதிபராய்த் தமது வாழ்க்கையின் மூன்று தசாப்தங்களுக்கு மேலான காலப்பகுதியை இக்கல்லூரியில் செலவிட்டவர் அமரரான பண்டிதர் க. இராசையா அவர்கள். தமிழ் இலக்கண, இலக்கியங்களை பழமையும் புதுமையும் இணைத்துக் கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவரேயெனலாம். பாரிய குடும்பப் பொறுப்பும், விவசாயப்பணிகளும் அவரை அலைக்கழித்தபோது கூடதனது கற்பித்தலில் எள்ளளவேனும் தவறாத நேர்மையாளர். உயர்தர வகுப்புகளில் அவரிடம் தமிழ் படிப்பதே ஓர் அலாதியான இன்பம். உலகின் பல பாகங்களிலும் அவரது மாணவர்கள் பன்முகப் பரிமாணங்களில் ஒளி வீசிக்கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ பிரச்சினைகளைக் கல்லூரி மட்டத்தில் தீர்த்து வைத்த பண்பாளர் அவர். இராசையா மாஸ்ரரை நினையாத தமிழ்நெஞ்சுகள் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயத்தின் குடும்பத்தில் இருக்கவே முடியாது.

அவரைப் போன்றே அமரர் திரு. பொ. கேதாரநாதன், திருமதி. திருமகள் கேதாரநாதன் ஆகியோரது பணியும் அளவிடற்கரியது. கணவனும் மனைவியுமாக 30 இற்கு மேற்பட்ட ஆண்டுகளை எங்கள் கல்லூரியினதும் மாணவர்களினதும் நலனுக்காகவும் சந்தனமாகத் தங்களைத் தேய்த்து உழைத்தவர்கள். திருமதி கேதாரநாதன் அவர்களின் இறுக்கமான கட்டுப்பாடும் வழிகாட்டலும் பல மாணவியரைப் புடம் போட்டு எடுத்துள்ளது. கணித பாடத்தை அவரிடம் நிரம்பிய கண்டிப்பின் மத்தியிலேயே கற்கமுடியும். அந்தக் காலத்திலேயே செயன்முறைக் கல்விக்கு முதலிடமளித்தவர் அவர். திரு.கேதார நாதன் அவர்களோ நகைச்சுவையுணர்வு மிக்கவர். அதே வேளை கண்டிப்பும் மிகுந்தவர். கல்லூரிக்கு வெளியிலும் கூட மாணவர்களை அவதானித்து நெறிப் படுத்தியவர். காலை–மாலை வகுப்புகள், விடுமுறை வகுப்புகள் என அவர் இரசாயனவியல் கற்பித்த நாட்களை இன்றைய ரியூசன் உலகினருடன் ஒப்பிடும்போது நெஞ்சின் நன்றியுணர்வால், தூய ஆசிரியத்துவத்தின் மகிமையால் கண்கள் நீரைச் சொரிகின்றன. மலைக்கு வயிறு நொந்து சுண்டெலியைப்பெத்ததாம் என்பது போன்ற பல்வேறு பழமொழிகளையும் பொருத்தமாகக் கூறிக்கற்பித்தவர் அவர். அடிக்கடி மாணவர்களை வேதாளம் எனக் கூறுவதும் நுள்ளி (கிள்ளி)த் தூக்குவதும் கூட இன்னும் நினைவில் நீங்காதனவாகும்.

சைவமும் தமிழும் கற்பிப்பதில் தன்நிகரில்லாத புகழ்படைத்த செல்வி. அ. கந்தையா அவர்களின் சேவையும் மகத்தானது. சுமார் 35 ஆண்டுகள் இடை நிலை வகுப்புகளில் கற்பித்தவர் அவர். அவரது துணிச்சலும், பேச்சுவன்மையும், இறைபக்தியும், இனிமையான சுரமும் பலராலும் போற்றப் பட்டவை. இவரைப் போன்றே பௌதிகவியலைக் கற்பித்த கோபாலபிள்ளை மாஸ்ரரும் (பின்னர் வருமானவரி உத்தி). ஆங்கிலம், புவியியல், சரித்திரம் ஆகியன கற்பித்த நாகராசா மாஸ்ரரும் குறிப்பிடக் கூடியவர்கள். தமது பண்பும் அன்பும், கண்டிப்பும் கொண்டு மாணவரை நெறிப்படுத்திய ஆசான்கள் இவர்கள். இவர்களைப் போலவே மேனை பொன்னுச்சாமி ஆசிரியர், உடற்கல்வி பொன்னுச்சாமி ஆசிரியர், சண்முகநாதன் ஆசிரியர் போன்றவர்களும் தூய உள்ளத்துடன் கற்பித்த பெருமைக்குரியவர்களாவர். இவர்களைப் போன்று பலரையும் நெஞ்சின் அலைகள் சுமந்து வருகின்றன. எமது கல்லூரித் தாயானவள் தனது குழந்தைகளின் மனதை விட்டு என்றும் நீங்காள். அவளது வாழ்வே எம்வாழ்வு. அவள் மீண்டும் வசந்தம் காண நாமனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

ஆக்கம்: திரு. செல்லையா திருநாவுக்கரசு
பண்டிதர், சைவப்புலவர்,
B. A Dip in Education,
M. A

www.padippakam.com

# பொய்யாப் புலமை தந்த மெய்யுரைகள்

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள நூலெல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ? வான்புகழ் திருவள்ளுவத்தின் வாய் மொழியில் பல்வேறு உரை இருந்தும் பரித்த உரையில் பரிமேழகன் தெரித்த உரையில் தெளிவுகண்டு எழுதுகின்றேன்.

மனிதன் கேட்கக் கடவுள் சொன்னது பகவத் கீதை, கடவுள் கேட்க மனிதன் சொன்னது திருவாசகம். மனிதன் கேட்க மனிதன் சொன்னது திருக்குறள். அதுவும் வாழ்ந்து காட்டிய ஒரு பெருமகனால் வாழ வகுத்துக்காட்டிய ஒரு வழிகாட்டி இதனால் திருக்குறளை ஒரு வாழ்வு நூல் எனலாம் என்கிறார் பேரறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம்.

இரண்டாயிரம் நுற்றாண்டுக்கு முன்பே எழுதப்பட்டாலும் மனிதன் விஞ்ஞானியாக மாறி விஞ்ஞான உலகமாக மாறிவிட்டாலும் இன்றும் மனிதனோடு மனிதகை கலந்திருக்கும் பெருமை பெற்ற நூல் திருக்குறளேயாகும். வாழும் காலத்திற்கே வந்து வழிகாட்டும் நூலாக இந்நூலமைகின்றது.

திருவள்ளுவர் திருக்குறளை மூன்று பாலாக வகுத்துள்ளார். அறத்துப்பால் பண்பு, பண்பாடு என்னும் பரிணாமங்களையும் பொருட்பால் சமுதாயத்தின் அமைப்பையும் அதாவது அரசியல் மனிதர்கள் பல்வேறு பிரிவினராகவிருந்து நாட்டுக்கு ஆற்றும் செயற்பாட்டையும், காமத்துப்பால் அறவாழ்வின் செயல் வாழ்வினையும் விபரித்துக் காட்டுகின்றது. மூன்று பகுதியாகப்பகுத்து 1330 குறட்பாக்களில் தமது ஆழமான கருத்தை மிகவும் தெள்ளியமாகத் தந்துள்ளார். இவற்றுள் மனிதவாழ்க்கைக்குத் தேவையென நான் கருதும் சில குறட்பாக்களின் சிறுவிளக்கத்தை எழுதுகின்றேன்.

திருவள்ளுவர் இல்லறவாழ்வியலில் மிகவும் தெளிவாக இல் வாழ்வின் கடமைகளையும் வாழ்க்கைத்துணை நலத்தின் உறுதுணைகளையும் மிகவும் தெய்வீகமாக விளக்கியுள்ளார்.

இல்வாழ்வான் எனப்படுபவன் பொருளைஈட்டும் போது மற்றவர்களுக்கு எந்த துன்பமும் கொடுக்காமல் நேர்மையான வழியில் சேர்த்தல் வேண்டும். பழிபாவம் செய்யாமல் செல்வத்தைப் பெருக்கி பகிர்ந்துண்டு வாழ்வானாகில் அவனுடைய இல்லறம் இன்பத்திற்கே உரியதாக அமையும். இதனையே வள்ளுவப் பெருந்தகை,

“பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்.”

இல்வாழ்வான் என்பான் பழிக்கஞ்சிப் பாத்தூண் உடைத்து வாழ்ந்தால் மட்டும் போதாது அறன் இழுக்காமலும் வாழ்தல் வேண்டும் என வள்ளுவப் பெருந்தகை பின்வரும் குறளில் விளக்கியுள்ளார்.

“ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.”

இல்வாழ்க்கையில் வாழ்பவன் தானும் நேர்மையான வழியில் வாழ்ந்து தன்னைச் சேர்ந்தவர்களையும் அறவழியில் வாழவைக்க வேண்டும். இக்குறளில் திருவள்ளுவர் உணர்த்துவது முதலில் தான் நேர்மையான வழியில் வாழ்ந்தால் தான் மற்றவர்களை நன்னெறிப்படுத்த இல்வாழ்வானுக்கு தகுதி இருக்கின்றது. ஒருவன் நேரிய வழியில் இல்லாமல் ஊருக்கு உபதேசம் செய்ய முடியாது. அப்படி ஒருவன் வாழ்வானாகில் தங்கள் ஐம்புலன்களையும் அடக்கி தவம் செய்யும் முனிவரிலும் அவனே சிறப்பானவன்.

மேலே கூறிய சிறப்புகளைப் பெற்று வாழும் இல்வாழ்வானுக்கு வாழ்க்கைத் துணையின் மாண்பு மிகவும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றார் திருவள்ளுவர். பெண்மையைப் போற்றும் பெருநெஞ்சினர், தாய்மையைப் போற்றும் தண்ணளியாளர், இல்வாழ்க்கையின் சிறப்பினை இனிதுறக் கிளத்திய திருவள்ளுவா், இல்வாழ்க்கைக்கு உற்ற துணையாய் உதவும் வாழ்க்கைத்துணை நலத்தையும் வகையுறப் பேசுகின்றார். “வளத்தக்காள் வாழ்க்கைத்துணை” என்ற தொடரே திருவள்ளுவரின் சீரிய சிந்தனையை உணர்த்துகின்றது. “இல்லாள்” என்ற சொல் இல்லத்தை ஆளும் மாட்சிமை பெற்ற தலைவியைக் குறிக்கும். அதற்கு எதிர்ப்பதமான “இல்லான்” என்ற சொல் வறியவனையே குறிக்கும். எனவே சங்கத்தமிழர் இல்லத்தை ஆளும் பொறுப்பினைப் பெண்ணுக்கே வழங்கினர். “மனை முதல்” என்ற சொல்லும் இல்லத் தலைவியை இனிதுறக் கிளத்த எழுந்த சொல்லேயாகும். இதனையே வள்ளுவர்,

“இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளது என்
இல்லவள் மாணாக்கடை என்று குறிப்பிட்டுள்ளார்.”

“இல்லவள் மாண்பானால் இல்லது என்?” என்றும், “இல்லவள் மாணாக்கடை உள்ளது என்?” என்றும் நயம்படக் கிளத்துகின்றார்.

நிறைவு பெற்ற வாழ்க்கைத் துணையாக சிறப்படைவதற்கு “விருந்தோம்பல்” என்னும் பண்பாடு

படிப்பகம்

www.padippakam.com

இல்லாளுக்கு இருத்தல் அவசியம். தனது கணவன், தனது பிள்ளைகள் என்ற வட்டத்துக்குள் சுயநல வாழ்க்கை வாழுதல் பெண்மைக்கு அழகல்ல என்பதை விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் விளக்குகின்றார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

அதாவது, அனிச்சம் பூவானது நாம் முகரும் போது எங்கள் மெல்லிய மூச்சுப் பட்டே வாடிவிடும். அந்தப் பூவிலும் மென்மையானவர்கள் விருந்தினர்கள். விருந்தினர்களை புன்முறுவல் பூத்தமுகத்தோடு இனியவை புகன்று உபசரிக்க வேண்டும். மனிதனாகப் பிறந்த எல்லோரும் ஒரே மனநிலையில் வாழ்வதில்லை. பல்வேறு பட்டவர்களுக்கு வெவ்வேறு பிரச்சினைகள். எப்படியான மனக்கஷ்டங்கள் வந்தாலும் விருந்தினர்களுக்கு அதனை ஒருபோதும் ஒப்புதல் கூடாது. அப்படி நாம் கூறினால், "இவ்வளவு துன்பத்திற்கையும் நாம் எதற்காக இங்கு வந்தோம்" என அவர்கள் துன்பப்பட்டே செல்வார்கள். இல்லாள் விருந்தினர்களுக்கு உணவைப் பரிமாறும் போது இனிமையான சொற்களைப் பேச வேண்டும். பல்வேறு பலகாரங்களைச் செய்தும் இனியவை பேசி பரிமாறா விட்டால் அந்த விருந்தோம்பலால் பலனில்லை.

நாம் இனியவை கூறும் போது உதட்டளவில் பேசக் கூடாது. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வரவேண்டும். இன்புற வரவேற்பு கொடுத்து விட்டு அவர்கள் போனதன் பின்பு புறங்கூறுதல் கூடாது. இதனையே அறம் கூறவந்த தெய்வப் புலவர் புறங்கூறுதலின் கொடுமையை மிகத் தெளிவாகப் பத்துக் குறட்பாக்களில் எடுத்தியம்புகின்றார். "மன்னுயிர்க்கு அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை, ஆதனால் ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல் வேண்டும்" என்று கூறும் தமிழ் மறையாளர் அறமே செய்யாது போனாலும் குற்றமில்லை. அறத்திற்கு மாறான செயல்களைச் செய்தாலும் கூட இழுக்கு இல்லை. ஆனால் ஒருவன் புறங்கூறான். அதே இனிமையானது என்று கூறுகின்றார்.

"புறங் கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங் கூறும் ஆக்கம் தரும்"

போகவிட்டுப் புறஞ் சொல்லி பொய்யான கதைகளை சிருஷ்டிக்கும் கீழ்மக்கள் நிலத்திற்கு பாரமாக வாழ்வதைக் காட்டிலும் சாதலே நன்று என வள்ளுவப் பெருந்தகை மனங்கவன்று எடுத்தோதுகின்றார். அடுத்து மனிதன் பொய் சொல்லாமல் வாழவேண்டும் என்பதையும் வள்ளுவப் பெருந்தகை விளக்குகின்றார்.

இறைவனின் பாரிய சிருஷ்டி மனிதன். நல்லது கெட்டது அறிந்து பகுத்து வாழக்கூடிய ஆற்றல் பெற்றவன். எனவே மெய்மை, பொய்மை இரண்டையும் பிரித்துப் பார்க்கும் மனப்பாங்கு மனிதனுக்கு உண்டு. ஒருவன் பேசுவது உண்மையா பொய்யா என்பது அவனுடைய மனச்சாட்சிக்கு மட்டும் தான் தெரியும். தான் பேசும் பொய் தன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று ஒருவன் கருதுவதால் மட்டும் அது உண்மையாகாது. பொய்மை திரை போடவல்லது. ஆனால் உண்மை எல்லாவற்றையும் மீறி உள்ளத்தின் ஆழத்தை தொடவல்லது. ஆதலால் உள்ளத்தால் பொய்யாது வாழவேண்டும். இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை,

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."

நாம் நல்லவற்றைச் செய்யாமல் நல்லவற்றைப் பேசாமல் இருந்தால் அதன் விளைவு நாம் பெற்றெடுக்கும் செல்வங்களையே போய்ச் சேரும். நாம் விதைக்கும் விதையே பயிராக வளருகின்றது. நல்ல நாற்றுடன் பயனற்ற நாற்றும் சேர்ந்து நாம் ஊற்றும் நீரிலேயே வளர்ந்து விடுகின்றது. நாம் இல்வாழ்க்கையில் சிறப்பாக புறங்கூறாமல், கதைகளை சிருஷ்டித்து மற்றவர்களைப் புண்படுத்தாமல் நல்ல மனதுடன் வாழ்ந்தால் தான் நாம் பயனுள்ள பண்பாடான செல்வங்களைப் பெறமுடியும். நாம் செய்யும் தீவினையே எம் பரம்பரையை சென்றடைகின்றது. இதனையே பொய்யாப்புலமை,

"தம்பொருள் என்ப தம் மக்கள் அவர் பொருள்
தம் தம் வினையாள் வரும் எனக் கூறியுள்ளார்."

எனவே மானிடப் பிறவியேற்ற நாம் மாக்களாக வாழாமல் பழிக்கஞ்சி, அறங்கூறி, உள்ளத்தால் பொய்யாது இனியவை கூறி இன்பமாக வாழ்வோமாக.

முற்றும்

கலைவாணி தெய்வேந்திரன்
1972-1982

www.padippakam.com

# இந்த இழி நிலை என்றுதான்.....

இந்த நூற்றாண்டின் இறுதியிலும் அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலுமாக இலங்கைத் தமிழர்கள் உலகத்தின் காற்று நுழையும் இடங்களிளெல்லாம் வாழத் தொடங்கி விட்டார்கள். யார் யாருக்கு இன்னென்ன தொழில் தான் என்கின்ற மரபைக் கட்டிக் காத்து வந்த எம் மக்கள் என்ன தொழில் ஆகினும் உயிர் பிழைத்தால் போதும் என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டு உலகத்தின் மூலைகளில் ஒதுங்கி வாழ வேண்டியவர்களாகி விட்டனர்.

ஆனாலும் எமது சமூகத்தில் தொன்று தொட்டு வந்த சாதி அமைப்பு வடிவங்களை காப்பாற்றியாக வேண்டும் என்பதிலும் பலர் கூடுதல் அக்கறை செலுத்தாமலும் இல்லை. சிலர் இந்த சாதி அமைப்பு வடிவங்களை மனதளவில் ஏற்றுக் கொள்ளா விடினும் மூத்த தலைமுறையின் பிற்போக்குத் தனங்களை எதிர்த்துப் போராடாமல் அந்த சக்திகளுக்கு துணை போவதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

தமிழர்களுக்குத் தனித் தாயகம் என்னும் போராட்டம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் இந்தச் சாதிகளை அழிப்பது எப்படி என்பது வெறும் கேள்விகளாகவே உள்ளது. எம் ஈழத்துத் தேசத்திலும் கூடத் தம் சொந்த இடங்களை விட்டு வேறு வேறு இடங்களில் வாழ்வதற்குக் கையில் அகப்பட்ட உடை துணிகளையும் கொண்டு செல்வதோடு சாதிகளையும் சேர்த்துத் தான் கொண்டு செல்கிறார்கள். சொந்த தேசத்தில் மட்டுமன்றி ஐரோப்பா அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இடம் பெயர்ந்து வாழ்பவர்கள் கூட இம்முறைகளை ஒதுக்கி விடுவதாக இல்லை. இரத்த உறவான திருமண பந்தம் என்னும் சடங்கு வந்தவுடன் ஒவ்வொரு தமிழனும் தத்தமது சாதிகளைத் தேடி ஓடுவதே உண்மை நிலை.

இந்த நிமிடம் மரணமா? நாளைக்கு மரணமா? என்னும் பீதியுடன் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டிருக்கும் எமது தேசத்து மக்கள் இந்த சாதி அமைப்பு வடிவங்களை காப்பாற்ற முயல்வது மிகவும் கொடுமையானதும், துரோகத்தனமானதும் ஆகும். இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய மனித விரோதமாகும்.

தீவுப் பகுதியை இலங்கை இராணுவம் பிடித்த போது ஒட்டு மொத்த சனங்களும் ஊரை விட்டு வெளியேறினர். ஒருசிலரைத் தவிர! பின்னர் ஏழு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறினர். எமது வேலணையைப் பொறுத்தவரையில் எத்தனையோ சாதிகள் குறிச்சி குறிச்சியாக வாழ்கின்றனர். இடம் பெயர்ந்து திரும்ப வந்தும் கூட தம் சொந்த இடங்களை யாருமே மாற்றிக் கொள்ளவில்லை.

இந்த சாதி அமைப்பு வடிவங்களை இந்து ஆலயங்களே கட்டிக்காப்பாற்றி வருவது கொடுமையிலும் கொடுமை. அந்த வகையில் எனக்குத் தெரிந்தவரை வேலணையில் அம்மன் கோவில் ஒன்றிருக்கிறது. அதுதான் வேலணையிலேயே பெரிய கோவில் என்று சொல்லலாம். நான் சிறு பிள்ளையில் இருந்து இளைஞனாக இருக்கும் வரை இந்தக் கோவில் கொடியேற்றத்திலிருந்து பூங்காவனத் திருவிழா வரை பார்த்தவன்.

கடவுள் பொதுவானவன். எல்லோரையும் ஒரே மாதிரியாக பார்ப்பவன் என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்பேற்பட்ட கடவுள் வாழும் ஆலயத்தில் தான் சாதிமுறை காப்பாற்றப்படுகிறது. அந்தக் கோவிலின் திருவிழாக்களைப் பார்த்தே எமது ஊரில் எத்தனை சாதிகள் உண்டென்று சொல்லி விடலாம். உதாரணமாக கொடியேற்றம் பொதுவானது. இரண்டாந்திருவிழா கோவியர் என்று சொல்லப்படுகிறவர்களுக்கும், மூன்றாந் திருவிழா வெள்ளாளச் சாதி என்கின்ற ஒரு குடும்பத்தார்க்கும், நான்காம் திருவிழா வண்ணார் என்று சொல்லப்படுபவர்க்கும், ஐந்தாம் திருவிழா தச்சர், ஆறாம் திருவிழா திமிலர், ஏழாம் திருவிழா முக்குவர், எட்டாம் திருவிழா கோவியவெள்ளாள கலப்புடையவர்க்கும், ஒன்பதாம் திருவிழா கோவியர்க்கும், பத்தாம் திருவிழா வெள்ளாளர்க்குமாக இருந்தாலும் தலித்து மக்கள் என்று சொல்லப்படும் கீழ் மட்டத்திலுள்ள பறையர், பள்ளர், அம்பட்டர், நளவர் என்னும் சாதிகளுக்கு திருவிழா வழங்கப்படவில்லையென்பது இன்னுமொரு கொடூரம். இது எனது ஊரான வேலணையில் இப்படியென்றால் இப்படிப்பல ஊர்களில் உள்ள கோவில்களில் இந்த சாதி அமைப்பு முறைத் திருவிழாக்கள் நடந்து வருவது விடுதலைப் போராட்டத்திற்கே களங்கம் விழைவிக்கக் கூடியதே. தமிழ் மக்கள் மீதும் விடுதலையின் மீதும் பற்றுக் கொண்டுள்ளவர் என்று சொல்லிக் கொள்ளும் நாம் இந்தக் கேவலங்களை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். எத்தனை நாளைக்கு இந்த இழி நிலைகளை முக்காடு போட்டு மூடிக் கொள்ள முடியும். இக்கேவலமான அமைப்பு வடிவங்களை மாற்றி அமைக்காத வரை "சாதி எங்கு இருக்கு இப்ப ஆரு சாதி பாக்கினம்" என்று பேசுவதெல்லாம் வெறும் வேடிக்கையே. எத்தனை பாரதிகள் வந்து சாதியைப் பற்றியெல்லாம் பாடினாலும் அமைப்பு வடிவங்கள் மாறாத வரை எந்த மாற்றமும் வந்து விடப் போவதில்லை என்பதை மனித நேயத்தின் மீது பற்றுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனிதன் நாகரீகம் அடைந்து 21-ம் ஆண்டை எட்டிப் பிடித்து விட்டான். விஞ்ஞான வளர்ச்சி நினைத்துப் பார்க்க முடியாதளவு வளர்ந்து விட்டது. இக்காலத்திலும் தமிழ்க் கலாச்சாரம் பற்றியும் பெருமை பற்றியும் தொண்டைத் தண்ணீர் வற்றும் வரை பேசிக் கொள்ளும் நாம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலாவது அக்கேவலமான அமைப்பு வடிவங்களை உடைத்தெறியத் தயங்குவோமாயின் உலக மக்கள்முன் மனித நேயத்தைப் பற்றிப் பேசும் அருகதையை இழந்து விடுவோம்.

— அ.தேவதாசன்

படிப்பகம்

www.padippakam.com

# புலம் பெயர்ந்து வந்ததனால்...

தந்தையவர் குருதி புலம் பெயர்ந்து
தாய் வயிற்றில் வந்ததனால்
தாய்க்கு நீ மகனானாய்
தாய் வயிற்றில் தானிருந்து
பிள்ளை நீ வளர்ந்ததனால்
தாய் மண்ணை மீட்கும்
படைக்கு நீ துணையானாய்

முள் கொண்ட பெருங்காட்டு மூங்கிலும்
புலம் பெயர்ந்து வந்ததனால்
புல்லாங்குழலாகி, புட்டவிக்கும் குழலாகி
வில்லு வண்டிக் கூடார வில்லுமாச்சு

பூமியடியிலிருந்த தங்கம்
புலம் பெயர்ந்து வந்ததனால்
பூவுலக மாந்தர் பூணும் பொருளாச்சு

முல்லை, மல்லி, ரோஜாவும்
புலம் பெயர்ந்து வந்ததனால்
மணமக்கள் சூடும் மணமாலை தானாச்சு

அந்தோ! எம் தமிழ், எம்மினம்,
புலம் பெயர்ந்து வந்ததனால் என்னாச்சு?
முதுகெலும்பு தான் முறிந்த முதியவர் நிலையாச்சு

புலம் பெயர்ந்து வந்ததனால் - காட்டில்
துணையிழந்த கலையானோம் சுடு - காட்டில்
கொள்ளியுடன் சுற்றிவரும்
மகனின் மனநிலையில் நாமானோம்
பெருமை கொண்ட எம்முன்னோர்
பேணிக்காத்த கலாச்சாரத்தை, கலையை
பேசிட, பேணிட முடியாது உள்ளத்தே ஊமையாகி
மாற்றான் மொழிபேசி மகிழ்வு கொண்டோம்

புல்லுக்காய் பசுமாடு மறுகாடு
புலம் பெயர்ந்து வந்ததனால் மறந்ததுவா தன்வீடு
நெல்லுக்காய் பறவையினம்
புலம் பெயர்ந்து வந்ததனால் மறந்ததுவா தன்கூடு

புலம் பெயர்ந்து வந்ததனால் நாம்
பொன் கொண்டோம் பொருள் கொண்டோம்
பெருந்தொகையில் கார் கொண்டோம்
தங்கத்தால் கத்திசெய்து வெட்டிக் கொண்டோம்
கேக்கிங்கு பிள்ளைகட்கு

புலம் பெயர்ந்து வந்ததனால் புதிய பெயர் கொண்டோம்
சுதந்திரமாய் பறந்த எம்மை
ஒரு கூட்டுக்குள் தானடைத்தோம்
ஊருக்காய் உறவுக்காய் ஒரு கணமும்
ஊராலும், உறவாலும் மறுகணமும்
உள்ளம் தானுடைந்து உருக்குலைந்து போகின்றோம்

- வேலணையூர் பொன்னண்ணா

www.padippakam.com

## முன்னூறு பிராங்

இஞ்ச எங்க பாத்தாலும் ஒரே சங்கமாத்தானிருக்கு. தமிழ் வளக்க, கலை வளக்க, அகதிக்கு, அபிவிருத்திக்கு, அதுக்கு இதுக்கெண்டு ஆளுக்கொரு மன்றம், சங்கம், வாரியம், வட்டம், ஒன்றியம் எண்டு எக்கச்சக்கம் பல நோக்காக இருந்தாலும் நல்ல விசயங்கள் தான் நடக்குது. “ஆரு குத்தினாலும் அரிசியானால் சரி”. ஆனால், நான் இதுகள் ஒண்டுக்கும் போறதில்ல சேருறதில்ல. இதுகள்ள மினக்கெட எனக்கெங்க நேரம்? இனிக் காசும் கேப்பினம். எண்டு போட்டு விலகி விலகிப் போறது. தண்ணி அடிக்கிற எல்லாரும் சேந்து சங்கம் வைச்சால் நான் கட்டாயம் உறுப்பினராச் சேருவன். தண்ணி அடிக்கிறது எனக்கு “பார்ரைவேல” மாதி.

நான் பிறந்தது வளந்தது வேலணை தான். படிச்சதும் வேலணை ம.ம.வித்தியாலயத்தில தான். ஆனால் பிரான்சில இருக்கிற ப.மா.சங்கத்துக்குக் கனகாலமாச் சுத்திப்போட்டன்.

ஒரு நாள் “லாச்சப்பல்ல” எங்கட பழைய மாணவர் சங்கத்து பாலா தேவாவை சந்திச்சன். என்ன அங்கத்தவராச் சேர்க்கிறதுக்கு கேட்டவ. நான் சொன்னன், “ஐயோ அண்ண நான் அங்க படிக்கயில்ல அதுக்குப் பக்கத்தில சைவப்பிரகாசாலையில படிச்சனான்” எண்டன். அவை சொல்லிச்சினம், “அங்க முதல்ல படிச்சால் பிறகு சென்றல் கொலிச்சிலதான படிச்சனி” எண்டு பாலா சொல்ல தேவா சொல்லிச்சுது, உன்னைக் கண்டனான். அவற்ற “பஜ்” இவற்ற “பஜ்” எண்டு மடக்கப்பாத்தார். பிறகு நான் சொன்னன் சைவப்பிரகாசாலையில் படிச்சிட்டு அப்பிடியே கொழும்பில படிச்சனான். படிச்சிட்டு அப்பிடியே 5 வருசம் நாலாம் குறுக்குத் தெருவில வேல செய்தனான். பிறகு தொண்ணூறில இஞ்சால வந்தனான். எண்டு ரெண்டு பேரையும் கொழும்புக்கு இழுத்து சுத்த றை பண்ணினன். பாலா சொன்னார் எனக்கு உன்னைத் தெரியாது. கொழும்பில நான் கனகாலமா உத்தியோகம் பாத்தனான். கொழும்பில எந்தப் பள்ளிக்குடத்தில படிச்சனி? துருவினார். அவைக்கு நான் பொய் சொல்லுறன் எண்டு சமசியப்பட்டுத்தான் துருவ வெளிக்கிட்டினமெண்டு நினைச்சு நான் தழிழையும் மாத்தத் தொடங்கினன்.

பெரிசா வந்தத்துக்கப்புறம் வேலணையத் தெரியாது. மிச்சங்காலம் கொழும்பில தான் இருந்தன். நீங்களு நம்பாத ஆளுவா இருக்கிறீங்க, நம்ம வேலைக்குப் பெய்த்திட்டிருக்கிறன். நேரமாகுது..... ஒரு மாதிரி வெட்டிப் போட்டு நான் மாறியிட்டன்.

தாச்சிக்குத் தப்பி அடுப்புக்குள்ள விழுந்த மாதிரி பிறகொருநாள் “கார் டு நோர்ட்” ஸ்ரேசனில எங்கட பழைய மாணவர் சங்க மூத்த உறுப்பினர்கள் பாலாவையும் சிறியையும் சந்திச்சன். கையில பைல்லும் இருந்தது. ஐடன்ரிக் காட் இல்லாதவன் ஆமி செக் பொய்ன்ரில பிடிபட்ட மாதிரி மாட்டிக்கிட்டன். எனக்கு உள்ளுக்க சரியான பயமும் வெக்கமுமாப் போச்சுது.

“உன்னக் கனகாலமா தேடிக்கொண்டிருக்கிறன். உன்ர அட்றஸ் உம் தெரியா? ரெலிபோன் நம்பரும் தெரியாது. சுகமா இருக்கிறியா? எங்கயிருக்கிற”. தலைமையுரையோட சிறி கதையப் போட்டார். பாலாவ அண்டைக்குச் சுத்திப் போட்டன். சிறிக்கு என்னச் சின்னனிலேயே தெரியும்... இப்ப பாலாக்கு முன்னுக்கே என்ர சுத்தல் குலையப் போகுது. சிறி என்னப் பற்றி என்ன நினைப்பான். “சீரழிவும் சின்னத்தனமுமாப் போகுதே” எண்டு மனம் படபடக்க...

“சோத்துக்கும் சுகத்துக்கும் குறைவில்லை கண்டீர். மற்றெல்லாம் குறையே குறை” என்பதில் இப்படியாக “எங்க ஒங்கட ஸ்கூல் விசயமா போய்க்கிட்டிருக்கீங்களா?” என்றதும் சிறி கொஞ்சம் கடுமையாக என்ன ஒங்கட ஸ்கூல், நம்மட ஸ்கூல்ல கட்டாயம் நீ அங்கத்தவராச் சேர வேணும் மாதம் 300 பிராங் அங்கத்துவப் பணமா கேக்கிறம். அங்க பிள்ளையளின்ர கல்வி வசதிக்கும், அபிவிருத்திக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறம். இவர் அண்டைக்குச் சொன்னார் தான் சென்றல் கொலிச்சில படிக்கயில்ல எண்டு கொழும்பில படிச்சதெண்டு. “இப்படித்தானண்ணை கனபேர் சுத்தினம். எல்லாரையும் சுத்த ஏலாது. எக்காலமும் சுத்த ஏலாது. இப்பிடிச் சொன்னவனுக்கு தண்டன குடுக்கவேணுமண்ண பிறப்பயே பொய்யாக்கிறான்...”

சரி சிறி அது எல்லாம் சாதாரமாப் போச்சுது “போம்” மைக்குடுங்க. படிவம் தந்து நிரப்பி கையெழுத்திட்டுக் கொடுத்தேன். இப்ப அங்கத்தவராச் சேந்து ஆறுவருசமாச்சுது. நான் பிறந்ததும் உண்மை, வளர்ந்ததும் உண்மை, படிச்சதும் உண்மை, இஞ்ச வந்ததும் உண்மை, இன்று வரை வாழ்ந்து கொண்டிருப்பதும் உண்மை. அப்ப எப்பிடி நானே என்னப் பொய்யெண்டு சொல்லுறது. ஏதோ உயிர் தப்பி பிரான்ஸ்சுக்கு வந்திட்டன். எல்லாம் இல்லையெண்டு போயிருமா? அல்லது எல்லாம் பொய்யாப்போயிருமா? விழுந்தவன விழுந்து கிடக்கிறவனால தூக்கிவிட முடியுமா? அழுகிறவன அழுகிறவனால தேற்ற முடியுமா? நாம உதவி செய்யாம வேற ஆரு செய்யறது.

பிள்ளைக்கு பால் வாங்கக் கடன் கேட்டால் இல்லையென்பினம். தண்ணியடிக்கக் கடன் கேட்டால் உடன தருவினம். தாய் வன்னியில பட்டினியில கிடக்க புள்ள யூரோப்பில கோயில்ல அன்னதானம் குடுத்த மாதிரி வாழாமல் இப்பதான் வாழ்ந்து கொண்டிருக்கிறன். இப்ப தண்ணியடிக்கிறத்த, சிகரட் பத்துறத்த கொஞ்சம் குறைச்சுப் போட்டன். தமிழ் வீடியோ கசட் பாக்கிறத்தையும் கொஞ்சம் குறைச்சுப் போட்டன். இப்பிடி மிச்சம் புடிச்சுத் தான் 300 பிராங் குடுக்கிறன். 300 பிராங் பெரிய காசே. பாக்கப் போனால் ஒரு சின்னக்காசு. 365 நாளைக்கு 300 பிராங் ஒரு சிம்பிள் எனக்கிந்த மனம் புடிக்காத குணம் தான் மற்றும்படி...

ஈழநிதி

படிப்பகம்

www.padippakam.com

## 2000ம் ஆண்டதில் எமதருமைத் தாய் வாழ்க!

ஈழத்தமிழ் மண்ணில் தமிழ்த்தாய் தான்
ஈன்றெடுத்த செல்வங்கள் எத்தனையோ
எண்ணில் அவற்றிலொன்று எமதருமை
பெருமைக்காய் அவதரித்த கல்லூரி.
கவினுடைய தீவகத்தின் கல்விதனை
வளர்த்திடவும் கற்றோரை மற்றைச்
சகல இடத்தினிலும் தகைமையுடன்
தக்கோர் மதித்திடவும் செய்திட்ட
எமதருமைத்தாய் அவளே தான்!
அவள் பெருமை சொல்லி முடியாது
எனினும் இரண்டாயிரமா மாண்டதிலே
மாண்புடைய பாரிஸ் மாநகரினிலே
அவள் மக்கள் அவளை நினைக்கின்றார்
நன்றி மறக்காது நற்பணிகள் செய்கின்றார்
அவர்தம் பணி வாழ்க அன்னையின்
புகழ் வாழ்க பொங்கிப் பொலிந்து!

உலகில் பிறந்தோர் அனைவருக்கும் கல்வி
பெறும் வாய்ப்பு என்பது ஒரு பிறப்புரிமை
அந்த உரிமையை எத்தனையோ இன்னல்
களுக்கு மத்தியில் வாழும் நம் மண்
சிறாருக்குப் பெற்றுக் கொடுக்க இறுதி
வரை நம்மால் ஆன அனைத்தையும்
செய்ய வேண்டிய தவசியம்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள்
ஐம்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள்
என இருந்த நிலை மாறி ஏறத்தாள
500 மாணவர்களையும் 30 ஆசிரியர்களை
யும் கொண்டிருக்கும் எமது கல்லூரித்
தாய்க்கு உதவ பழைய மாணவர் அனை
வரும் இன்றல்ல, நாளையல்ல, என்றுமே
ஒத்துழைக்க வேண்டுமென்பதே என் தாழ்
மையான வேண்டுகோள்

எமது நாட்டில் மீண்டும் அமைதியும் அன்பும்
நிரம்பி வளம்பெருக இறையருளை நாடிக்கொண்டு
பாரிஸ் பழைய மாணவர் சங்கம் நீடுழி
வாழ்கவென வாழ்த்துகிறேன

திருமதி வ. சண்முகநாதன்
பழைய மாணவி
முன்னாள் ஆசிரியை
லண்டன்

www.padippakam.com



# ஊஞ்சல்

**கோ**ளத்தின் மேற்புறம் தோற்றத்தில் அண்ணளவான எண்கோணத்தரைத்துண்டம். கோடைக்காலம். தெற்கிலோரிடத்தில் தலையை உள்ளேயிழுத்து என் ஓடுகளுக்குள் உறங்கிக் கொண்டிருக்கிறேன்.

பட்டப்பகல்.

சுட்டெரிக்கும் சூரியன்.அடித்து மூடப்பட்ட யன்னல்களையும் மீறி உள்ளே வரமுயலும் ஒளிக்கதிர்கள். கண்டுணரமுடியாத காற்றின் சுமையைப் புலப்படுத்தும் கணங்களின் தரிசனங்கள் கால அகலியைக் கல்லாக்கி கண்முன் நிறுத்தும் தூரத்து நினைவுகள். அறையென்று வரையறுக்கப்பட்ட இந்த என் ஆமையோட்டில் மூச்சடைக்கும் வேதனை. வெளியே வெய்யில். அதே சூரியன் அதே வெய்யில். ஆனால் இப்போ செஞ்சை முட்டி மூச்சடைக்க வைக்கிறது. தகிப்பது வெப்பமல்ல. நினைவுக் கண்டல்கள். தண்டிக்கப்பட்ட நினைவுகள். தண்டிக்கும் நினைவுகள்.

இயலாமை கால்களை இழுத்து வெளியே கொண்டு செல்ல, பாதைக்கும் மனத்துக்கும் பகை பரிணமிக்கின்றது. பக்கத்துப் பூங்காவில் குழந்தைகளுக்காக் கட்டப்பட்டிருந்த ஊஞ்சல்கள் இரண்டில் ஒன்றில் அமர்கின்றேன்.

தூங் அருகிலுள்ள ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள். அருகிலிருந்து ஊஞ்சலாடும் அவளின் குரல் எனக்குத் தொலைவில் இருந்து கேட்கிறது.

தூங் வியட்னாம் நாட்டிலிருந்து விபரம் தெரியா நாளில் விதியால் கலைக்கப்பட்டவள்.

அவள் ஊஞ்சலில் ஆடுகிறாள். ஆடிக் கொண்டே கதைத்தும் கொண்டிருந்தாள். ஏழு வயதாம். இறந்த காலமாம். படகொன்றில் தப்பியவளாம். தாய் தவறித் தண்ணீரில் விழுந்தாளாம். மீண்டும் வரவில்லையாம். தமையன் எங்கோ காட்டில் இருக்கிறானாம். இறந்துமிருக்கலாமாம். மரணமென்றால் என்னவென்று இவளுக்குப் புரிந்து விட்டது.

“புறப்படுதல் என்றால் இறத்தல்” என்று எவனோ சொன்னது இவளுக்கும் தெரியுமாம்.

கண்ணை மூடி அசையாமல் ஊஞ்சலில் இருந்து ஆடிக் கொண்டிருக்கும் நான் அவளின் கதைகளைக் கேட்பது போல் பாசாங்கு செய்து என்கதையையே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவளும் சிலவேளை எனக்குக் கூறுவதாகப் பாசாங்கு செய்து தனக்கே தன்கதையைக் கூறலாம்.

இதமான வெய்யில் சுட்டெரிக்கிறது.

தலைக்கு மேல் வேப்பமரம். காகக் கூட்டம். வடக்கே பனங்கூடல். வயல்வெளி. கூனல்பூவரசு. அருகிப் போன புல்லை அவாவுடன் பிறாண்டி மண்ணையும் சேர்த்து மென்று விழுங்கும் மாடுகளின் கூட்டம். கொழுத்தும் வெயில். குடிசைகளுக்குள் மனிதர்கள் சயனம்.

மதியவெயில் மனிதர்களை வீட்டிற்குள் சிறைப்பிடிக்க, வெயிலின் நண்பன் நான் வெளிப்பயணம் போகிறேன். பட்டமும் நூலும் வாலும் நானும். வழமைபோல பூவரச மரத்தின் முதுகில் இதமான காற்றில் பட்டமும் இதயமும்.

கள்ளிமரங்களின் பின்னால் கோவில் விழாக்கோலம் முடிந்து போன வெறும் கோவில். விரவிக் கிடக்கும் வெறும் இளநீர்க்கோம்பைகள். காய்ந்து போன தீர்த்தக்கால்வாய். பத்துநாள் படையெடுத்துச் சுற்றிவர உள்ள மனிதர்கள் விழாக்கோலம் கொண்டு விட்டுவிட்டுப் போன கோவில். மணியின் சலனமற்ற சயனம். ஓசைகள் உறங்குகின்ற மயானம் ஆலயம்.

திசையெல்லாம் கைகளை நீட்டி திட்டியில் நிமிர்ந்து நிற்கும் வேப்பமரம். கோவில்

படிப்பகம்

www.padippakam.com

வேப்பமரம். இம்மரத்தில் ஏறுவதற்குத் தடைவிதிக் கப்பட்டுள்ளது. கடவுளின் மரம். ஏறுபவர் தண்டிக் கப்படுவர். முதியவர்கள் கூற்று.

பட்டம் பறக்கிறது. பூவரச மரக்கிளை நூல் பிடிக்கிறது.

நாலு பக்கமும் சுற்றிப் பார்த்து விட்டு, யாரும் காணாமல், வேப்பமரத்தின் உச்சியிலிருந்து வேடிக்கை பார்க்கிறேன். கடவுளின் வேப்பமரத்தின் உச்சியில் இருந்து ஊர் முழுவதையும் ஒரே பார்வையில்.

ஒற்றைப் பனையின் உச்சியில் பருந்து. தூரத்தில் எருவைப் பொறுக்கி தலையில் உள்ள கடகத்தில் போடும் சிறுமி. தலைப்பாகையை இறுகக் கட்டி துவிச்சக்கர வண்டியை மிதிக்கும் பொன்னையர். மிளகாய்த் தோட்டத்தில் கிளிகலைக்கும் சிறுவன். மிகுதி சயனத்தில்.

ஒற்றைப்பனை உச்சியிலிருந்து எழுந்து உயர்ந்து பருந்து பறக்கிறது. பருந்தின் பார்வைக் குள் என்பார்வை இரைதேடி பட்டத்தைவிட உயர்ந்து எழும் பருந்தின் பார்வைக்குள்ளிலிருந்து அசையாமையில் ஆழ்ந்துபோன என் கிராமத்தின் ஆத்மாவைத் திருடனைப்போன்று பருகுகிறேன்.

தூங் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக் கின்றாள். ஓங்கி நிலத்தில் உதைத்து..... பின்னோக் கியெழுந்து..... மீண்டும் தாழ்ந்து..... உந்தி... முன்னோக்கியெழுந்து... ஊஞ்சலாடுகிறாள். அவளின் துல்லியமான கணீரென்ற குரல் காதுகளில் வருடலை ஏற்படுத்துகின்றது. இவள் கடவுளின் குழந்தையாம். அப்படித்தான் அவள் தந்தை சொன்னாராம். தான் ஒருநாள் இறந்து போனாலும் கடவுள் அவளைக் கைவிட மாட்டார் என்றும் சொன்னாராம். தான் பௌத்த மதத்தைச் சார்ந்தவளாம். சாந்தியே உருவான புத்தரைத் தன்னுள்ளே கொண்டுள்ளாளாம்.

தூரத்திலுள்ள தெங்கம் குளத்தின் மேல் கோட்டான்களும், கொக்குகளும் பறக்கின்றன. எத்தனை அற்புதமானவொரு கனவை நான் நேற்றுக் கண்டேன். கல்லுடன் கட்டி என்னை யாரோ கடலில் போட்டார்கள். தெய்வாதீனமாகக் கடலுள் தாழவில்லை. கட்டியபடியே நான் கல்லில் அமர்ந்திருக்க கல்லே தோணியாகி என்னைக் கரைசேர்த்தது. நான் கடவுளின் குழந்தை. வேப்பமரத்தில் ஏறினால் சாமி என்னைத் தண்டிக்காது. என் பட்டம் இன்னமும் பறந்து கொண்டிருக்கிறது. இடுப்பிலிருந்து இளகி விட்ட சாரத்தை இறுகக் கட்டியவாறு இறங்கி நடக்கின்றேன். இதமான கொதி வெயில். கோவில் மண்டபத்தில் ஆடுகள். பொருக்கு வெடித்த என்தோல் வியர்வையில் மினுங்குகின்றது. குடித்த கஞ்சி செமித்து விட்டது. பசியெடுக்கவில்லை பூவரசமரக் கிளையிடமிருந்து பட்டத்தின் நூலை வாங்கிக் கொண்டு அண்ணாந்து பார்க்கிறேன். சூரியன் இலேசாக மேற்கை நோக்கிச் சரிகிறான். பட்டம். நூல். காற்று. நான். சம்பந்தனுக்கு மூன்று வயதில் ஞானம் கிடைத்ததாம். ஒவ்வொருமுறையும் வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வரும் எனக்கு மட்டும் ஏன் இன்னும் கிடைக்க வில்லை. அண்ணாந்து பார்க்கிறேன். என் பட்டம் சலனமின்றிப் பறக் கின்றது.

“பட்டம் அறுந்த நூல் போல் பரிதவிக்க விட்டாயே” இப்படித்தான் பாப்பாக்காவின் கொப்பியில் எழுதப்பட்டிருந்தது. பாவம் அவள். சின்னவயதிலேயே தாய் இறந்து விட்டாளாம்.

பட்டத்தையும் நூலையும் மாறி மாறி பார்க்கிறேன்.

பட்டம் அறுந்தால் நூல்?

பாவம் பாப்பாக்கா.

பட்டத்தில் நான் புகுந்து, பட்டத்தின் நூலாகி, பட்டம் விட்டுக் கொண்டிருக்கிறேன். எனக் கும் இப்பட்டத்திற்கும் உறவில்லை. பட்டமும், கயிறும், பாப்பாக்காவும் நானும் ஒன்று தான். மண்ணெடுத்த கிடங்கின் விளிம்பில் நின்றவாறே நூலை உன்னி மேலும் பட்டத்தை உயற்றுகிறேன்.

தூங் ஊஞ்சல் ஆடுகிறாள்.

நரகத்தின் மேல் ஊஞ்சல் கட்டி, கண்ணைமூடிக் கொண்டே, அசையாமல் ஊஞ்சலாடும் அருமைக்கலை. நான் அசையாமல் ஆடுகிறேன். அவளின் படகில் இருந்து தவறிய தாய் மீண்டு வரவில்லை. என்படகில் இருந்து நான் மட்டும் தப்பிக் கொண்டேன். கேவலமாக. பிரளயத்துக்கு முன் புறப்பட்ட படகு “நோவா” வின் படகில் போன்று என் படகிலும் எல்லாப் பிரயாணிகளும் ஜீவன்களும் இருந்தன. பின்னர் ஏற்பட்ட தாழ்வில் எல்லாம் தாண்டு விட்டது. கல்லைக் கட்டிக் கடலில் போட்டும் நான் மீண்டு விட்டேன். மறுமுறை எனக்கு நானே கல்லைக்கட்டி கடலில் பாய்வேன். கடவுள்கள் கோமாளிகள். தூங் ஊஞ்சல் ஆடுகிறாள்.

மாரியில் நிரம்பி வழியும் இந்த மண்ணெடுத்த கிடங்கு வரட்சி காணப்போகின்றது. பாவம் இந்த மீன்கள். இவற்றிற்குத் தண்ணீர் வற்றப் போகும் விடயம் தெரியாது. மீன்கள் பாவம். மீண்டும் மாரி வரும் போது இவை மீண்டும் புதிதாகப் பிறக்கும். கோவில் குளத்தில் இன்னமும் தண்ணீர் இருக்கின்றது. நிலத்தை விறாண்டி வறுமைப் புல்லையுண்ட இந்த வெயில்வெளி மாடுகளின் தாகத்தைத் தணிக்க இன்னமும் தண்ணீர் இருக்கின்றது. கோவில் குளத்தை நம்பி வரட்சிக்கு அஞ்சாத மாடுகள்.

காலில் நெருஞ்சிமுள் குத்தி விட்டது. சப்பாணியாய்குந்தி முள்ளையெடுத்துவிட்டு கசியும் இரத்தத்தில் எச்சில் போடுகிறேன். இரத்தத்தின் மேல் எச்சில் மருந்து. பின்னால் மண் ஒட்டிக் கொள்ளும்.

www.padippakam.com

வலிபோய் விடும். நிலம் சுடுகின்றது. குந்தியிருக்கச் சந்தோசமாக இருக்கின்றது. எவ்வளவு வடிவான குறுனிக் கற்கள்.

பசுக்கல்லு, கண்டுக்கல்லு, நாய்க்கல்லு, மரக்கல்லு, கோழிக்கல்லு, முட்டைக்கல்லு, குஞ்சுக் கல்லு, மனுசக்கல்லு, கடவுள்கல்லு,....... எவ்வளவு குறுனிக் கற்கள். முகிலும் அப்படித்தான்.

முதளமாதிரி, முருக்கங்கல்லுமாதிரி, பாறாங்கல்லுமாதிரி, பனங்கொட்டைமாதிரி, சந்திரன் மாதிரி, அமாவாசைச் சந்திரனுக்க இருக்கிற ஔவை யார் மாதிரி, தமிழ்ப்பாடக் கொப்பியில கீறிய தாமரைப்பூ மாதிரி,.....

தூங் ஆடுகிறாள். அவளின் ஊஞ்சல் முன்னோக்கியும் பின்னோக்கியும் உயரும் போது அவளது குரலைக்கறைப்படுத்தும் இரக்கமற்ற இடைவெளி. இடைவெளிகளுக்கு எப்போதுமே இரக்கமிருந்ததில்லை. அவற்றிற்கு ஏமாற்றத்தை அளிக்கமட்டுமே தெரியும். அவளுக்கும் பள்ளிக்கூடம் போகவிருப்பமில்லையாம்.

புத்தகங்களிலும் ஆசிரியர்களிலும் வெறுப்பு. அர்த்தம் தெரியாத தேவாரங்களை நாள்முழுவதும் பாடமாக்குவதில் வெறுப்பு. பள்ளிக் கூடம் போவதாகப் புறப்பட்டு, புத்தகங்களுடன் வேப்பமரத்தில் ஏறியிருந்து, மாலைவீடு வந்த மகிழ்ச்சிகள். எழுத்துகளில் வெறுப்புற்று ஏதுமறியாத அப்பாவிபோல் சிலேற்றுகளை உடைத்த சம்பவங் கள்...

வடக்கு வெளியில் வயல்களுக்குள் ஆட்காட்டி முட்டையிடும் அனைத்து இடங்களையும் அவள் அறிந்திருக்கிறாள். கூனிப்பதுங்கி சென்று குழிகளுக்குள் ஆட்காட்டியிடும் முட்டைகளையெ ல்லாம் தினமும் சோதனையிடுவாள். பின்னர் குஞ்சுகளையும் சோதனையிடுவாள். எல்லாம் பறந்து போனதுக்குப் பிறகும் கவலைப்படமாட்டாள்.

அடுத்தமுறையும் முட்டையிடும். பொரிக்கும். பறக்கும்.
பறந்தது முட்டையிடும். பொரிக்கும். பறக்கும்.

அவளுக்கு ஆட்காட்டியைப் பற்றி எல்லாம் தெரியும். ஒவ்வொரு நாளும் உச்சி வெயிலில் கடகத்தைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு போற அவளுக்கு ஆட்காட்டிகள் தான் சினேகிதிகள். அவளும் ஆட்காட்டிகளைப் போல. பள்ளிக்கூடம் போவதில்லை. தான் வேலைக்கா ரியாம். வடக்கத்தையாள். வாய்க்காரியென்றெல்லாம் சொல்லுவினமாம். பாவம் அவள்.

உடுப்பு மூட்டையைத் தூக்கிக் கொண்டு குளக்கரையில் போனவள் திரும்பி வரவில்லை. “வீட்டுக்குப் போகணும் போல இருக்கு” என்று அடிக்கடி சொல்லும் அவள் “வீடு” போய் விட்டாள்.

வெய்யில், ஆட்காட்டி முட்டை, குஞ்சு, அவள், பறப்பு.....

நீண்ட நேரமாக வயலில் இருந்து யோசித்த என் மண்டை சூடு பிடிக்கின்றது. வீட்டை விட்டுப் போன பலர் மீண்டும் வீடு திரும்புவதில்லை. சுப்பிரமணியமும் அப்படித்தான். “எஸ்ரேட்” ல இருந்து வந்தவன். நன்றாக விறகு கொத்துவான். பாவம் சுப்பிரமணியம். மிளகாய்க்கண்டுக்கு அடிக் கவாங்கிய பொலிடோலைக் குடித்துக் கொண்டுதான் அவனும் வீட்டுக்குப் போனான். இரண்டு நாளைக்குப் பின்னர் அவனின் உடலை மிளகாய்த் தோட்டத்துக் குள் ஜனங்கள் கண்டு பிடித்தார்கள்.

சுப்பிரமணியம் போய் விட்டான் என்று அறிந்த அன்று நாள் முழுவதும் நான் வேப்பமரத்தில் தான் இருந்தேன். கடவுளின் வேப்பமரத்தில். முதியவர்கள், ஏறக்கூடாது என்று சொன்ன அந்த வேப்பமரத்தின் உச்சியில் இருந்து மூத்திரம் பெய்து கொண்டிருந்தேன். அதன் பின்னர் அந்த மரத்தில் ஏறவில்லை.

தூங் உந்துதலை நிறுத்தி விட்டாள். அவளின் ஊஞ்சல் அசையாமையை நோக்கி மெதுவாக அசைகின்றது. அவள் நீண்ட நேரமாகக் கதைத்துக் கொண்டிருந்தாள். தனது கதைகளை நான் கேட்க வேண்டும் என்ற எவ்வித அக்கறையு மின்றி கதைத்துக் கொண்டிருந்தாள்.

அவளின் அசையாத ஊஞ்சல் என் ஊஞ்சலின் அருகே.

ஒருவேளை அவளும் என்னைப் போன்று அசையாமல் ஊஞ்சல் ஆடுகிறாளோ?

வெயில் தணிந்து விட்டது.

வீட்டை போகவில்லையா என்று தூங் கேட்டாள்.

பாவம் தூங். நானும், அவளும் வீட்டுக்குப் போகமாட்டோம் என்று அவளுக்குத் தெரியாது. எனக்கு வீடில்லாதது மாதிரி அவளுக்கும் வீடில்லை. இருள்களுக்குள் தோன்றும் பிரமைகள் தான் எங்கள் வீடுகள். பிரமாண்டமான காற்று மண்டலத்தில் பிராணவாயுவை உறிஞ்சும் நானும் அவளும் வீடு தேடுவதில்லை. எல்லைகளை இல்லா மாக்கும் இருள்கள் எங்கள் மாளிகைகள்.

ஒடுங்கிய, ஒளியும்பாயும், தன் கண்க ளால் உற்றுப்பார்த்து, ஒருகணம் அமைதியாகி சற்று அருகே வந்து தூங் கேட்கிறாள்.

உனக்கு இறந்தகாலம் இல்லையா?

ஓங்கி நிலத்தை உதைத்து பின்னோக்கி எழுந்து... மீண்டும் தாழ்ந்து..... உதைத்து..... முன்னோக்கியெழுந்து..... நான் ஆவேசமாய் ஆடுகிறேன்.

நன்றி ஓசை

**வாசுதேவன்**
**வே.ம.ம.வி.பழைய மாணவன்**

படிப்பகம்

www.padippakam.com

**புலம் பெயர் நாட்டில் வாழும் தமிழா**
**உன்னை நீ எண்ணிப்பார்**

புலர் பெயர் நாட்டில் வாழும் தமிழா
உன்னை நீ எண்ணிப் பார்
அந்நியநாட்டில் உன்னை மதியார்
நீ அந்நியன் அந்நியன்தான் என்பதனை நீ எண்ணிப்பார்
என்னதான் நீ அந்நிய மொழியை கற்று எப்படித்தான்
பாண்டித்தியம் பெற்றும் நீ அந்நியன்தான்
என்பதனை நீ எண்ணிப்பார்
புலம் பெயர் நாட்டில் வாழும் தமிழா
நீ எப்படித்தான் உயர் வாக கொடி கட்டி வாழ்ந்தாலும்
நீ உதித்த உன் தாய் நாட்டில் தமிழ் கொடி
நாட்டி வாழ்வது போல் ஆகாது என்பதனை நீ எண்ணிப்பார் தமிழா

புலம் பெயர் நாட்டில் வாழும் தமிழா
நீ உன் புதிய தலைமுறையை உருவாக்கி தமிழ்மொழியையும்
தமிழ் பண்பாடு பின்பற்றப் படுகின்றதா என்பதனை எண்ணிப் பார்த்தாயா!
மாறாக உன் புதிய தலைமுறையோ அந்நிய மொழியிலும்
அந்நிய கலாச்சாரத்திலும் ஊறி அந்நிய பித்தலாட்டத்தில்
மாறுவதை எண்ணி அதற்கான மாற்று வழி
அமைக்க வேண்டும் என்று நீ எண்ணிப்பார் தமிழா!

புலம் பெயர் நாட்டில் வாழும் தமிழா!
உன் தமிழ் மொழி வாழ; உன் தமிழ் பண்பாடுவாழ
என்னத்தை செய்யலாம் என எண்ணிப்பார்த்தாயா!
அந்நிய மண்ணில் தமிழ் வளர்க்க சங்கங்கள்,
தமிழ் கலாச்சார போட்டி நிகழ்ச்சி பலவற்றை
உருவாக்கி புதிய தமிழ் தலை முறையினர்க்கு
தமிழ் உணர்வும் பண்பாட்டு உணர்ச்சியையும்
உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தை நீ எண்ணிபார்த்தாயா!

அந்நிய மண்ணில் வாழும் தமிழா! நீ உன் புதிய
தலை முறையினர்க்கு தமிழ் மொழியையும் தமிழ் பண்
பாட்டையும் புகட்ட மறந்தாயானால், உன்
தமிழ் மொழியும், தமிழ் கலாச்சாரமும்
உன்னுடன் முடிந்து விடும் என்பதனை நீ எண்ணிபார் தமிழா!

புலம் பெயர் நாட்டில் வாழும் தமிழா! உன் புதிய
தலை முறையை தமிழ் உணர் வோடும் தமிழ் பண் பாட்டோடும்
வாழ வழி அமைத்து விட்டால் தமிழா!
கோடான கோடி இன அழிப்பு எதிரிகள்
தோன்றிடினும் எம் தமிழ் மொழியையும்
தமிழ் பண்பாட்டையும் அழிக்கவே முடியாது
என்பதனை நிச்சயம் நீ உணர்ந்திட்டு அதன் வழியே நடந்திடுவாய் தமிழா!

தொகுப்பு
பஞ்சாட்சரம் கந்தப்பிள்ளை
வே. ம. ம. வி. பழைய மாணவன்
(முன்னாள் பயிர்ச் செய்கை
உத்தியோகத்தர் வேலணை மேற்கு)

www.padippakam.com

# ஆயிஷா

இரா.நடராஜன்

இந்த விஞ்ஞான கேள்வி பதில் நூலும் இவ்வரிசையில் வர இருக்கும் இன்னபிற பன்னிரண்டு நூல்களும் தமிழில் எழுத என்னைத் தூண்டியது ஆயிஷா தான். இந்த நூலுக்குள் நுழையும் முன்னர் என் ஆயிஷாவை தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்த புத்தமெங்கும் வார்த்தைகளாக வாழ்பவள் அவள் தான். உங்களிடம் சொல்வதில் என்ன இருக் கிறது? இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்த நொடியில் என் விழிகள் கனத்துப் போகுமாறு கண் ணீர் கொப்பளிக்கிறது. இந்த நூலை எழுதிய ஒரு தேர்ந்த விஞ்ஞானவாதிக்கும் ஆயிஷாவின் கதையை எழுதிக் கொண்டிருக்கும் ஒருத்திக்கும் இடையில் தான் எத்தனை வித்தியாசம்? என் ஆயிஷாவை நினைக்கும் போது மட்டும் இப்படிக் குழந்தை மாதிரி, துக்கம் கொப்பளிக்க அழநேர்கிறது எனக்கு.



எனக்கு முதன் முதலில் தெரிய வந்த ஆயிஷாவுக்கு 15 வயது. நான் அறிவியல் ஆசிரியையாக பணியாற்றிய ஒரு கிறிஸ்தவ பள்ளியில் பத்தாம் வகுப்பு-பி பிரிவில் அய்ம்பத்தாறு மாணவிகளில் ஒருத்தி. அப்பள்ளி மாணவியர் விடுதியின் காப்பாள யுவதியில் ஒருத்தியாக அங்கேயே தங்கியிருந்த எனக்கு சற்றேறக்குறைய ஒரு செக்கு மாட்டு வாழ்க்கை பழகிப் போயிருந்தது. நாங்கள் எட்டுப் பேர் அவ்விதம் காப்பள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமணமாவதன் மூலம் இந்தச் சூழல் வாழ்விலிருந்து தப்புவோர், அவர்களுக்குப் பதிலாய் வரும் புதியோர் பிறகு தங்கள் திருமணத்திற்காகக் காத்திருக்கத் தொடங்கும் அப்பணியிடத்தில் சற்றேறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாக் காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தங்கிப் போனோம்.

நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னைத் தின்று கொண்டிருந்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமானாள் அவள். அதிகம் கவர்கிற விதமில்லை ஆயிஷா. பற்கள் துருத்திய படி முகத்தில் வந்து விழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமானத்தைப் பெற வாய்ப்பில்லை. தவிர நான் அவர்களது வகுப்பாசிரியை இல்லை. வருகைப் பதிவேட்டை சரிசெய்யவும் ஒவ்வொரு மாணவியையும் நெருக்கமாக அறியவும் வாய்ப்பு இல்லை. ஆகையால் முதலில் எனக்கு ஆயிஷா யாரோ ஒருத்தி.

முதன்முதலில் அவளை அறிய நேர்ந்த சந்தர்ப்பத்தை நினைக்கிறேன். எனக்கு சிலிர்க்கிறது. பல ஆண்டுகளாக ஒரு வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப் போயிருந்தேன். சில வேளைகளில் சில பாடங்களை நடத்தினோமா என்கிற நியாபகமே இல்லாமல் கூட நடத்தியிருக்கிறேன். இத்தனை வருடத்தில் பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் என்ன பெரிதாக மாறி விட்டது? காலையில் எழுந்து பல் துலக்குவதை உற்சாகத்தோடா செய்கிறோம்? எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட் அதுவும் இல்லை. அதே ஓம்ஸ் விதி. அதே செல் பிரிதல். புதிதாக தெரிந்து கொள்ளும் ஆர்வமற்று ஒரு இயந்திரமாய் கிரீச்சிட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.

அன்று காந்தவியல் குறித்துப் பாடம். பூமி எப்படி ஒரு காந்தமாக உள்ளதென விளக்கிக் கொண்டிருந்தேன். ஒரு காந்தம் அதுவும் செவ்வக வடிவக் காந்தம். அதைக் கையில் உயர்த்திக் காட்டினேன். சிரமமே இல்லை. காந்தத்தின் வடநோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத்தனத்துடன் யாவரையும் உறங்கவைத்துவிடும் என் தொனியில் கரும் பலகையில் சில கிறுக்கல்களுடன் நடத்திக் கொண்டே போனேன். எவ்வளவு நேரமோ?

“மிஸ்” என்றொரு குரல், கரும்பலகையிலிருந்து திரும்புகிறேன். எதற்காகவோ திடுக்கிட்டபடி எழுந்து நிற்பவளை வழக்கமான எங்கள் அக்கறையற்ற பார்வையுடன் “என்ன... வாந்தி வருதா?” என்றேன். வகுப்பே கொல்லெனச் சிரித்தது. சரியான முண்டம் நான். எப்பேர்ப் பட்டவள்? என் ஆயிஷாவைப்போய் அப்படிச் சொல்லியிருக்கிறேன்.

“இல்ல மிஸ்... சந்தேகம்”

இது நிச்சயம் ஆச்சரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது.

படிப்பகம்

www.padippakam.com

சட்டென முகம் சுருக்கி சுள்ளென எரிந்து விழும் குரலில் "என்ன...?" கடைசி வரிசையில் யாரோ சிரித்தார்கள். அப் பெண்ணின் இளைத்த தேகம் நடுங்குவதைக் காணமுடிந்தது. பக்கத்து இருக்கைக்காரி அவளது சட்டையை இழுக்கிறாள். காப்பாற்றி உட்கார வைக்கும் முயற்சி. பின் மறுபடி "என்ன...? என்றேன்.

"மிஸ்... அந்தக்காந்தத்தை ரெண்டா வெட்டினா என்ன ஆகும்... மிஸ்?"

நெடுநாள் தூக்கத்திலிருந்து எழுந்தவள் போலானேன். இதுவரை இல்லாத அர்த்தத்தில் அவள் என்னைப் பார்த்தாள். நான் அறிவியல் போதினியாக வந்து இந்த ஆறுவருடத்தில் காந்தவியல் பற்றி நான் சந்திக்கும் முதல் சவால். காந்தத்தைப்பார்த்து யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்றுப் பொறிதட்டியது.

"ரெண்டு காந்தம் கிடைக்கும்" சரி பதில் சொல்லியாகி விட்டது. ஆனால் அவள் உட்காரவில்லை. மிகக் கடினப்பட்டு புன்னகைக்க முயற்சி செய்தாள்.



"அந்த காந்தத்தை வெட்டிக்கிட்டேப் போனா? உதாரணமாக நமக்கு இந்தக் காந்தத்தைத் துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வெச்சிட்டா...?"

"ரொம்ப சிம்பிள்மா... முடிவுறா எண்ணிக்கையில் காந்தம் கிடைக்கும்"

மீண்டும் நிசப்தம், லேசாக வியர்க்கிறது, அவளுக்கு. வகுப்பு உற்சாகத்தில் ஒரு போட்டியை ரசிப்பது போல் உணர்ந்தேன். உடனே, "உட்காரு" என்றேன். பின் நடந்து கொண்டிருந்தேன். ஏதேதோ பாவனையாகப் பேசிக் கொண்டு குறுக்கு நெடுக்காக மணி அடிக்கும் வரை அலைந்து விட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்.

திற்கை இழுக்கும். ஆனால் இழுபடும் காந்தத்தின் வடக்கே அடுத்துள்ள காந்தம் ஏற்கனவே இழுத்து கிட்டிருக்கும் இல்லையா...? மிஸ்"

"ஆமா... அதுக்கென்னன்ற?"

என் சந்தேகமே அங்கதான் இருக்கு... எல்லா காந்தங்களின் கவர்திறனும் ஒன்றெனக் கொண்டால் அவை ஒட்டிக் கொள்ள வாய்ப்பே இல்லையே... எப்புறமும் நகராமல் அப்படியே தானே இருக்கும்?

"................"

"ஏன் நாம இந்தப் பிரபஞ்சம் முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை நேர்கோட்டில் வைத்தது போல் அமைக்கப்பட்டதா வெச்சிக்கக் கூடாது? அந்தக் கோணத்தில் பூமிங்கர காந்தத்த ஆராயலாம் இல்லையா?

"பதிமூன்று வருட பள்ளி வாழ்க்கை. பின் மூன்றாண்டு இயற்பியல் பல்கலைக்கழகத்தில், இப்படியொரு கேள்வியை நான் கேட்டுக் கொண்டதாக நினைவில்லை. "எங்கோ படித்ததாக நியாபகம்" என்றேன். ஏதாவது சொல்ல வேண்டுமே.

"The truth of Magnets, வெப்ரோட ஸ்டூடண்ட் கிங்லீங் எழுதியது... அருமையா இருக்கு... படிக்கறீங்களா மிஸ்...?

"இந்த புக்கெல்லாம் நீ படிக்கிறாயா?" அவ்வளவு தான் என் ஆயிஷா கிடைத்து விட்டாள். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்றுவரை மீள முடியவில்லை. அறை வாங்கியவளைப் போல புத்தகத்தை வாங்கிக் கொண்டு சரசரவென ஆசிரியர் அறைக்கு நடந்தேன்.

2

அடுத்த வகுப்பறையை தாண்டியிருக்க மாட்டேன். கூடவே வந்தது நிழல். "மிஸ்... ப்ளீஸ், மிஸ். ஒரே ஒரு நிமிஷம் மிஸ்..." அப்படி சொல்லும் போது அவள் முகத்தைப் பார்க்க வேண்டும் நீங்கள், அதற்கு மேலும் புறக்கணிக்க முடியவே முடியாது.

"என்ன... சொல்லு"

காந்தம்... பத்திதான் மிஸ்"

"சொல்லும்மா... டயம் ஆச்சில்ல?"

"முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர் கோட்டில் வெச்சா... எதிர் துருவங்களை கவரும் அதன் இயல்பு என்ன ஆகும்?"

"................"

"ஒரு காந்தத்தின் வடக்கு மறு காந்தத்

இப்போதும் சொல்கிறேன். அந்த நிமிடத்திலேயே ஆயிஷா என்னை முழுசாக வென்று விட்டாள். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதன் பின் அவளை நான் வெறுத்ததே இல்லை. ஒரு செக்கு மாட்டிற்கு இதைவிட அமர்க்களமாய் யார் தான் சூடு போட முடியும்?

இரவில் புத்தகத்தை எனது விடுதி அறையில் புரட்டிய போது மேலும் பல அதிர்ச்சிகள். முதலில் அது மாவட்ட மைய நூலகத்தின் முத்திரை பெற்றிருந்தது. அது திருடப்பட்டிருக்க வேண்டும். பின் அதில் ஆயிஷா அடிக்கோடிட்டிருந்த முறை. ஆங்காங்கே காணப்பட்ட அடிக் குறிப்புகள். எல்லாமே அவளைக் குறித்த எனது எண்ணத்திற்கு மேலும் மேலும்

படிப்பகம்

www.padippakam.com

ஆச்சரியக்குறிகளை சுட்டிக் கொண்டிருந்தன. ஆயிஷா ஒரு குழந்தை. இல்லை, அவள் யாரோ, மனுஷி கூட இல்லை. வேறு ஏதோ பிறவி. கடவுளே... நான் ஒரு நிமிடம் கூடத் தூங்கவில்லை.

விடுதியில் காலை வேளையில் அவளது வகுப்புப் பெண்களை அழைத்துப் பேசத் துடித்தேன். அவளைப் பற்றி அறிய வேண்டும். இத்தனை நாட்கள் அவளை அறியாது போனது ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது. புத்தகமோ என் அறையே கனத்துப் போகும்படி என்னைத் திடுக்கிட வைத்துக் கொண்டிருந்தது. வேலைகள் ஓட வில்லை. இத்தனைக்கும் எல்லாவற்றையும் படிக்கவில்லை. அப்பெண் அடிக்கோடிட்டிருந்த வரிகளையும் அவளது அடிக்குறிப்புகளையுமே படித்து விழி பிதுங்கி போயிருந்தேன்.

முதல்பாட வேளையில் வகுப்பேதும் இன்றி ஆசிரியர் ஓய்வறையில் அமர்ந்து இருந்தேன். கையில் புத்தகம். ஓய்வறையில் ஆசிரியர்கள் புதிய புடவை டிசைன்களைப் பற்றி நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சரோஜினிக்கும் ரெஜினா மிஸ்க்கும் இதேதான் வேலை. இல்லையென்றால் நடிகைகளின் வித்தியாசங்கள். ஒரு நாள் புருவம், மறுநாள் மச்சம், இப்படிப் பேசிப்பேசிக் களைத்து பாடம் நடத்த வேண்டிய வகுப்பறையில் ஓய்வெடுப்பார்கள். ஆரம்பத்தில் இது எரிச்சலூட்டுவதாக இருந்தது. பிறகு மரத்துப் போனது. இப்போது புதியவளாகி இருக்கிறேன். அவர்களைப் பார்த்த எனக்கு அளவற்ற அருவருப்பு உண்டாகியிருந்தது.



திடீரென்று மாணவியர் பக்கம் பேச்சு சென்றது. ரெஜினா ஒவ்வொரு பெண்ணையாக கேலி செய்து கொண்டிருந்தாள். அவளது கொண்டை குலுங்க அவள் அதைச் செய்தாள். குதிரை மூஞ்சி, நரி வால், எலிவால் என்றெல்லாம் குழந்தைகளுக்குப் பெயர் வைத்திருந்தாள். அவளது அருவருப்பான வேடிக்கைகளை சரோஜினி ரசித்துக் கொண்டிருந்தாள். மாராப்பு விலகி மாரு குலுங்க அவள் சிரிப்பது காண சகிக்கவில்லை. “ரெஜி.. ரெஜிமா... கொன்னுட்டடி...” ஆராதனைகள் வேறு.

பள்ளிக் கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன. நானும் அவர்களது கூட்டத்தில் ஒருத்தியா? எல்லாம் முன் தயாரிக்கப்பட்டவை. ரெடிமேட் கேள்விகள், அவற்றிற்கு நோட்ஸ்களில் ரெடிமேட் பதில்கள், வகுப்பறையில் ஆசிரியர்கள் ஓய்வெடுக்கிறார்கள். வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திரமாய் (அதுவும் முக்கிய கேள்விகளுக்கான விடைகளை மட்டும்) மாணவர்கள் உருமாற்றம் அடைந்து விட்டனர். எல்லாம் பொட்டைப் பாடம்.

எல்லா மாணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு, வரிசை எண், தேர்வு எண், அவை பெற்றெடுக்கும் மதிப்பெண் எண்கள், எங்கும் எண்கள். எண்களே பள்ளிகளை ஆள்கின்றன. எல்லா ஆசிரியைகளுமே ஏதாவது ஒரு வகையில் மாணவரின் அறிவை அவமானப் படுத்துகிறார்கள் என்பதைக் கண்டேன். அவர்களில் ஒருத்தியா நான்? என் மீதே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. ஒரு பெண், அறிவார்த்தமான ஒரே ஒரு கேள்வியால் என்னை எப்படி யோசிக்க வைத்து விட்டாள்?

“ஒரு கேஸ் இன்னிக்கு பிடிபட்டுது... இதை கேட்டியோ...” என்று அங்கலாய்த்தபடி என்னிடம் வந்தாள் சுகுணாமிஸ், மேல்நிலைக்கு கணக்கு நடத்துபவள். விடுதிக்காப்பாள யுவதிகளில் ஒருத்தி. எந்த உற்சாகமும் இன்றி “என்ன” என்றேன்.

“வினோதமான கேஸ்... லெவன்த் வீட்டுக் கணக்கு திருத்திக்கிட்டிருந்தப்போ கஷ்டப்பட்டு பிடிச்சேன்... பாதி பேர் நோட்ல ஒரே கையெழுத்து! அதுவும் ஒரு லாஜிக்சம் முதல்ல காப்பினு நெனச்சேன். அப்புறம் ஒருத்திய பிடிச்சி செமத்தியா குடுத்தேன். உண்மையை கொட்டிட்டா...”

“கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவள் என்னைக் காத்திருக்க வைத்தாள். நான் திடுக்கிட வேண்டுமென விரும்புவள் போலிருந்தாள். “ம்... சொல்லு” என்றேன்.

“நம்பமாட்ட... ஒரு டென்த் ஸ்டாண்டர்டு படிக்கிற பெண் லெவன்த்க்கு வீட்டுக்கணக்கு போட்டுத் தந்திருக்கு...”

“டென்த்தா...?” எழுந்து நின்றிருந்தேன்.

“ஆமாம்... கஷ்டப்பட்டு கண்டு பிடிச்சேன்... நேரா... ஸிஸ்டருட்ட போயிட்டேன்.” எனக்கு ஊர்ஜிதமாகி விட்டது போலானது. “என்ன... பண்ணினாங்க அந்தப் பெண்ண...?”

“அது ஒரு ஆயி அப்பன் இல்லாத கேஸ்”

“ஆர்பன்ஸ் ஹோமா?”

“சித்தி வீடோ என்னமோ... கார்டியன வரச்சொலலியிருக்காங்க... மோஸ்ட்லி டி.சி.யாதான் இருக்கும்.”

நான் எப்படித் தவித்தேன் என்பதை என்னால் இங்கு எழுத முடியாது. பிரின்சிபால் அறைக்கும் ஓய்வறைக்கும் இருப்புக் கொள்ளாமல் நான் அலைந்தேன். பதினொன்றாம் வகுப்பு மாணவியர்க்கு ஒரு டென்த் மாணவி வீட்டுக் கணக்குச் சொல்லித் தருகிறாள் என்றால் அவள் என்ன நம்ப முடியாத பிறவி? இங்கு ஏன் வந்து பிறந்து தொலைத்தாள். அம்மா, அப்பா இல்லாதவளாமே... கடவுளே எங்கள் குழந்தைகளை

www.padippakam.com

ஆசிரியர்களிடமிருந்து காப்பாற்றும்.

அவளது வகுப்பிற்கு நான் போன நேரத்தில் அவளது இடம் காலியாக இருந்தது. விசாரித்தேன். "செம்ம அடி மிஸ்" என்று கலங்க அடித்தார்கள். ஏதோ ஆகிப் போயிருந்தேன். எதுவும் நடத்தப் பிடிக்காதவளாய் இருக்கையில் அமரப் போனேன்.

"மே... அய்... கம்... இன்... மிஸ்..." ஆயிஷா நின்றிருந்தாள். கலைத்தெறியப்பட்ட கனவு போல், வெள்ளைப்படுதாவுடன் இரண்டு இசுமாலிய பெண்கள் உடன் நின்றிருந்தனர். ஒருத்தி எனக்கு முகமன் செய்தாள்.

"நான் ஆயிஷாவோட சித்தி..."

"வாங்க..."

"எப்படி படுத்தறா பார்த்தீங்களா... இவ என்னோட அக்கா பொண்ணு இவ் பொறந்த நேரமே சரியில்லை. இந்த சனியன் வேணும்னு யார் அழுதா... தருதல மவ..."



என் கண் முன்னால ஆயிஷாவை அடிக்க முயன்றாள்.

"கொஞ்சம் பாத்துக்கங்க... புத்தி சொல்லுங்க. என் புருஷன் கூட இங்க இல்ல... துபாயில இருக்காரு... தனியா அவஸ்தை படறேன். இது இப்படி இருக்கு படிப்ப நிறுத்திடலாம்னா... சரி இவ்வளவு வருசம் படிச்சது ஒரு எசெல்சி முடிச்சிடட்டுமேனு பாக்கேன்..."

அன்று வகுப்பிலிருந்து கிளம்பும் போது சொன்னேன்.

"ஆயிஷா... ஈவினிங் ஹாஸ்டல்ல வந்து என்னப்பாரு..."

"எஸ்... மிஸ்"

## 3

ஆயிஷாவோடு நான் மிக நல்ல உறவு வைத்துக் கொண்டேன் என்பதை சொல்ல வேண்டியதில்லை. ஆரம்பத்தில் அவளது வருகை என சக ஆசிரியைகளுக்கு எரிச்சலைக் கொடுத்தது உண்மைதான். ஆனால் நாட்போக்கில் சரியாகிப் போனது. அவளிடம் இருந்து எக்கச்சக்கமான கேள்விகள் வந்து கொண்டேயிருந்தன. ஆயிஷாவுக்கு மட்டுமென்ன? யாரிடமாவது கேள்விகளை கொட்டித் தீர்க்க மாட்டோமா என்று ஏங்கிக் கிடந்தவள் தானே... நான் கிடைத்ததும் ஒட்டிக் கொண்டு விட்டாள். தினமும் மாலை நான்கு மணியிலிருந்து இருட்டு வரையில் விடுதியில் என் அறையில் இருக்கத் தொடங்கினாள்.

ஆயிஷாவிடம் எனக்குப் பிடித்தமான இரண்டு அம்சங்கள் இருந்தன. ஒன்று அவளது வேகம். அது அசாதாரணமானது. பத்து பன்னிரண்டு பக்கங்கள் படுவேகமாய் படித்து விடுவாள். இரண்டாவது கேள்வி, கேட்கும் அவளது அறிவுப்பசி புரியாததை புரியும் வரை விட மாட்டாள். நான் அவளோடு பழகிய குறுகிய காலத்திற்குள் இந்த புத்தகத்தில் நான் சேர்த்திருக்கும் இத்தனை கேள்விகளும் அவளைக் கேட்க வைத்தது அவளது அறிவுப் பசி தான்.

வெப்பவியல் நடத்திய போது அவள் கேட்ட கேள்வி அற்புதமானது. "மிஸ்... மெழுகுவர்த்தி எரியுது. ஒரு கேஸ் அடுப்பும் எரியுது இரண்டுமே நெருப்பு தான். மெழுகு தீபத்தின் ஒளி அதிகமாயும் வெப்பம் கம்மியாயும் இருக்கு. ஆனா அடுப்புல ஒளி கம்மியாவும் வெப்பம் அதிகமாயும் இருக்குதே. ஏன் மிஸ்?" நான் கேட்டுக் கொண்டேன். இந்தக் கேள்வி கேட்கும் மாபெரும் வித்தையை அவள் எங்கேயிருந்து கற்றாள்? அது அவளது உதிரத்தில் உள்ளதா, வகுப்பறை என்றல்ல. ஒரு நாள் நான் எனது ஆடைகளை துவைத்துக் கொண்டிருக்கும் போது கேட்டாள். "துணி துவைக்கற சோப் அழுக்கை அகற்றுவதற்கும் குளியல் சோப் அழுக்கை அகற்றுவதற்கும் இடையிலான வித்தியாசம் என்ன?" கடவுளே. இந்தப்பெண்... கேள்விகளால் இந்தப் பிரபஞ்சத்தை உலுக்கவே பிறந்திருக்கிறாள்.

ஒரு நாள் The Most Dangerous Man in America என்கிற பெஞ்சமின் பிராங்கிளினின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை கொண்டு வந்தாள். அதிசயிக்கத்தக்க வகையில் என்னையும் ஒரு புத்தகப் புழுவாக மாற்றிக் கொண்டிருந்தாள். "மின்னலில் மின்சாரம் உள்ளதை நிரூபித்த பிராங்கிளின் பட்டம் ஒரு பட்டு கைகுட்டையால் செய்யப்பட்டது மிஸ்" என்றாள். எனக்கு அதுவரைத் தெரியாது. ஒரு கேள்வியை எழுப்பிக் கொள்வது பிறகு அதற்கொரு விடை தெரியும் வரை ஓயாது தேடுதல் என்கிற ஒரு தேர்ந்த விஞ்ஞானியின் தகுதி ஆயிஷாவிடம் இயல்பிலேயே இருந்தது.

"மிஸ்... நியூட்டன் அறிவியல் சோதனைகள் நடத்த ஆரம்பிச்சப்போ அவருக்கு வயது பன்னிரெண்டு. பிராங்கிளின் தன் முதல் சோதனையை 40 வயசுலதான் செய்திருக்காரு வயதா பிரச்சனை. ரெண்டுபேரும் விஞ்ஞானிகள்தான்."

"..........."

"மிஸ்... இந்த புத்தகத்துல சில பக்கங்கள் நல்லா புரியுது சிலது புரிய மாட்டேங்குது"

"போகப் போகப் புரியும். அது அதுக்கு ஒரு வயசு வேண்டாமா..."

www.padippakam.com

"என்ன மிஸ்... நீங்க... எனக்கு இங்கிலீஷ் தான் பிரச்சினை..."

"அதுவும் ஒரு பிரச்சினை தான்"

"ரொம்ப கஷ்டமாயிருக்கு மிஸ்... நம்ம மொழிலயே வரணும்..."

"யாரு எழுதறாங்க..." சொல்லு

"நீங்க எழுதலாமே மிஸ்"

"இப்படி புத்தகங்களை திருடிட்டு வரியே... மாட்டிக்கிட்டா..."

"நான் தான் படிச்சிட்டு எடுத்த எடத்திலேயே வெச்சிடறேன்..."

"தப்பும்மா..."

"சொல்லுங்க மிஸ்..."

"என்ன சொல்லணும்?"

"நீங்க ஏன் தமிழ்ல இதையெல்லாம் எழுதக் கூடாது...?"

"பார்க்கலாம்... அதுக்கெல்லாம் நிறைய விஷயம் தெரியணும்?"

"தெரிஞ்சவரைக்கும் எழுத லாமே"

பிறகு வழக்கமான வேகத் தோடு கேட்டாள். இந்தப் புத்தகத் தின் 32 ஆம் பக்கத்தில் உள்ள அந்த கேள்வியை.

"மிஸ்... மின்னலிலிருந்து மண் ணை மின்சாரம் தாக்கும் இல்லை யா? மரம் கூட விழுவதுண்டு... கம்பியிலுள்ள மின்சாரத்திற்கும் அதுக்கும் என்ன வித்தியாசம்? காற்றில் எப்படி மின்சாரம் பரவுது?"



4

என் ஆயிஷா அப்படிப்பட்டவளாக இருந்தாள். பழைய எனது ரெக்சின் பையில் அவளது சின்ன ஆய்வுகூட பொருட்கள் இருந்தன. ஒரு லென்சுக் கண்ணாடி வட்டவடிவ காந்தம்... மருத்துவரின் ஊசி சிரிஞ்சு ஒன்று, மற்றும் ஒரு பழுதடைந்த டிரான்சிஸ்டர் வானொலி. அதனை சரிசெய்யும் முயற்சியிலேயே பல விடுமுறை நாட்கள் கழிந்தன.

நானோ நிறைய மாறிக் கொண்டிருந்தேன். எவ்வளவு மோசமானவளாக இருந்திருக்கிறேன்? எனது சொந்தத் துறை மீதே எவ்வித அக்கறையும் இல்லாமல் சொரணையற்ற பிண்டமாக ஆறு ஆண்டுகள் வெறுமனே தள்ளியிருக்கிறேன்.

ஆயிஷாவின் உறவில் தான் நான் உணர ஆரம்பித்தேன். எவ்வளவு விஞ்ஞானமற்ற முறையில் நாம் நம் குழந்தைகளுக்கு விஞ்ஞானம் போதிக்கிறோம் என்று. நாம் எங்கே குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட விஷயத்தை உணர்ந்து கேள்வி கேட்க அவகாசம் தருகிறோம்? அவர்கள் கேட்கத் தொடங்கும் முன்னரே நாமாக முன் தயாரிக்கப்பட்ட கேள்விகளால் அவர்களை மூழ்கடித்து விடுகிறோம். அறிவும் வளருவதில்லை பள்ளியில் ஆசிரியர்கள் அதிகம் சொல்வது எதை? "கைய கட்டு... வாயை பொத்து."

விரைவில் புரிந்து கொண்டேன் என் ஆயிஷாவுக்கு நாலுபுறமிருந்தும் பிரச்சினைகள் முளைத்தன. ஆனால் பைத்தியக்காரி. நான் உணரத் தலைப்படவில்லை அவளை, அவளை அறிவை அது எந்தத் திசையில் செலுத்தும் என்று. ஒருநாள் சட்டென்று கண்ணில் பட்டது. ஆயிஷாவின் பின்காலில் கட்டை பட்டையாக வீக்கம் துடித்துப் போகுமளவு அடிவாங்கியிருக்கிறாள். இப்போது அவள் என்னிடம் மிகவும் நெருங்கியிருந்தாள். அவளைத் தொடாமல் உங்களால் பேசவே முடியாது. அவள் மீது அவ்வளவு அன்பூறும்படி அவள் செய்திருந்தாள். கிட்டத்தில் அழைத்து விசாரித்தேன்.

"கெமிஸ்ட்ரி மிஸ் அடிச் சாங்க" என்றாள்.

"ஏன்?... ஏன் ஆயிஷா?"

"பேப்பர் வந்தது... மார்க் சரியா போடல. கேட்டேன்... சொந்த சரக்குக்கெல்லாம் மார்க்கு கிடையாதாம். நோட்ஸ்ல இருக்கிறத அப்படியே எழுதணுமாம் டென்த்துன்னு மிரட்டுறாங்க... மிஸ்... நோட்ஸ்லயே தப்பா யிருந்தா என்ன பண்றதுனுட்டு கேட்டேன்..." பேச முடியவில்லை அவளால், காண சகிக்காது, அழும் போது அவள் குழந்தை யாய் இருக்கிறாள்.

முன்பு ஒருமுறை சரோஜினியிடம் வாங்கிக் கொண்டு வந்தாள். இதே நோட்ஸ் பிரச்சினை... கடவுளே... அவரவர் அறிவை பயன்படுத்த அனுமதி யுங்களேன். எப்பேர்ப்பட்ட பெண். அவளை அடிப்பது என்றால் எப்படி மனசு வருகிறதோ... ராட்சசிகள்.

தவிர வேறுவித சிக்கல்கள். டியூசன், கிட்டத்தட்ட எல்லா ஆசிரியர்களுமே வீட்டில் தனியாக டியூசன் நடத்தி வந்தனர். பணம், எல்லாம் அது படுத்தும்பாடு. போட்டா போட்டி சண்டை. வீட்டிற்கு படிக்க வருவோர்க் காக விசேட சலுகை, சட்டங்கள், வகுப்பில் ராஜ மரியாதை... வினாத்தாள்களை முன்னர் அறியும் உரிமை. எவ்வளவு குமட்ட வைப்பது அது. வெட்க மில்லாமல் இதை அவர்கள் செய்தே வருகிறார்கள். வருமானவரியில் சேராத வருமானம். யார்தான் விடுவார்கள்?

ஆயிஷா யாரிடமும் டியூசன் படிக்காதவள் என்பதால் பழிவாங்கப்பட்டாள். வகுப்பிலும் கேள்விகள்

www.padippakam.com

கேட்டு குழப்பி விடுபவளாக இருக்கிறாள் அல்லவா. தொழிலை கடினமாக ஆக்குபவளை யார் தான் விரும்புவார்கள். விரைவில் எனது போராளி தினமும் உதை வாங்கிவரத் தொடங்கினாள்.

வரலாற்றுப் பாடவேளையில் கூட ஜெர்சி மிஸ் என்ன செய்தாள்?

"அசோகரை புத்தமதத்துக்கு மாற்றியது யார் மிஸ்...?"

"புத்த பிட்சு ஒருத்தர்?"

"இல்ல. அவர் பெயர்?"

"................"

"அவரது பெயர் உபகுப்தர்... மிஸ்..."

"தெரிஞ்சு வச்சுக்கிட்டு டெஸ்ட் பண்றயா... வாடி இங்க..."

ஒரு காலில் நிற்க வைத்து உதைத்திருக்கிறாள். இப்படி ஆயிஷா முன் எல்லா ஆசிரியைகளுமே தனது பிரம்புப் பிரயத்தனத்தால் அறிவை நிலை நாட்டிடத் தொடங்கி விட்டார்கள். "டீச்சருங்க அடிச்சா வலிக்காம இருக்க ஏதாவது மருந்து இருக்கா?" என்று கேட்கிறாள் ஆயிஷா.

"அடி... அசட்டுப் பெண்ணே" என்று கட்டிக் கொண்ட என்னால் அப்போது எந்த புதிரையும் உணர முடியவில்லை. எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்து விட்டேன்.



5

ஒரு இரவு அவள் அவசரமாக வீட்டுக்குக் கிளம்பிய போது தனது சிறிய குறிப்பு நோட்டை விட்டுச் சென்று விட்டாள். அன்றைக்குத் தான் என் ஆயிஷாவின் இன்னொரு பக்கம் தெரிய வந்தது. நூற்றுக்கணக்கான கேள்விகளின் தேவையை விட இந்த என் ஆயிஷா வித்தியாசமானவள். முதலில் அந்த நோட்டு என் கண்களில் பட்டபோது அதை எடுத்து மேஜையில் வைத்து விட்டு வழக்கமான விடைதிருத்தும் வேலையில் இறங்கி விட்டேன். பிறகு ஏதோ ஒரு உந்துதலின் பேரில் அதை எடுத்து புரட்டினேன். முதல் பக்கம், இரண்டு, மூன்று, நாலாம் பக்கத்தில் எனக்கு முதல் அதிர்ச்சி ஒரு பக்கம் முழுதும் ஆயிஷா நூற்றுக்கணக்கான முறை என் பெயரை எழுதி வைத்திருந்தாள். நீண்ட நேரம் அந்தப் பக்கத்தை நோக்கிய எனக்கு கண்ணீர் முட்டியது. பிறகு சில பக்கங்கள் வகுப்பில் எழுதப்பட்ட ஆங்கிலப்பாட்டு மூன்று முறை. பின் அந்தப் பக்கம் என்னை மேலும் அதிர்ச்சியடைய வைத்து கிட்டத்தட்ட மூர்ச்சையாகி விழவைத்தது அந்தப் பக்கம்.

என் பெயரை எழுதியிருந்த ஆயிஷா அதற்கு கீழே "என் தாய், என் முதல் ஆசிரியை, என் முதல் உயிர்" என்று ரத்தத்தினால் எழுதியிருந்தாள். ஆம் அது ரத்தம் தான் அய்யோ... இது என்ன பெண்ணே... உனக்கு என்ன நான் செய்து விட்டேன். உனது கேள்விகள் சிலவற்றை காது கொடுத்து கேட்டதைத் தவிர, அதற்கேவா இத்தனை அன்பைப் பொழிகிறாய்? அம்மா... நீ மாபெரும் மனுஷி, என்னுள்ளே யாரைத் தேடுகிறாய்? நீ பார்க்காமல் போன அப்பா, அம்மாவையா? அல்லது யாரையடி என் உயிரே. நீ இல்லாது போயிருந்தால் நான் மட்டும் யாரடி? ஒரு எந்திரத்தைவிட கேவலமான ஆசிரியையாகவே செத்துப் போய்க் கிடந்த என்னை மீட்டெடுத்தவளல்லவா நீ. என் பொக்கிஷமே இத்தனை நாட்கள் எங்கேயடி இருந்தாய்? எனக்கு உடல் சிலிர்த்துப் போனது, நான் சொல்லிக் கொண்டேன். அவளுக்கு, என் உயிரான ஆயிஷாவுக்கு எப்படியாவது நன்றியாக எதையாவது செய்யவேண்டும். உன்னை எப்படி ஆக்குகிறேன் பாரடி...? கடவுளே... அப்போது தான் அந்தச் சம்பவம் நடந்தது.

6

சம்பவத்திற்கு முதல் நாள் வகுப்பில் சர்ஹம்ப்ரி டேவியை பற்றி சுருக்கமாய் சிலவற்றை சொன்னேன். அறுவை சிகிச்சையின் போது உடலை மரத்து மறந்து போக வைக்கிற நைட்ரஸ் ஆக்சைடு வாயுவை அவர் கண்டு பிடித்தது குறித்து பாடம் நடத்தினேன்.

"நைட்ரஸ் ஆக்சைடு தண்ணீரில கரையுமா... மிஸ்..."

"தண்ணீரில மட்டுமல்ல அது எத்தனாலிலும் சல்பியூரிக் அமிலத்திலும் கூட கரையும்"

இப்படித்தான் நான் சோரம் போனது. எப்படி மறப்பது நான். அன்று பள்ளியில் குழந்தைகள் தினம். மாவட்ட ஆட்சித் தலைவர் வருவதாய் இருந்தது. மதியம் விழா இருந்தமையால் காலையில் பள்ளி விடுமுறை நாட்களில் வீட்டில் எவ்வளவு தான் வேலைகள் என்றாலும் பத்து பதினோரு மணிக்குள் என் ஆயிஷா ஓடோடி வந்து விடுவாள். அன்றைக்கு என்று ஆளைக் காணவில்லை.

எனது சொந்த வேலைகளில் மும்முரமாக இருந்தபோது உச்சி வெயிலில் ஒரு மாணவி வந்து அழைத்தாள். ஆயிஷா அனுப்பியதாகவும் வேதியியல் ஆய்வுக் கூடத்திற்கு பின்புறம் அவள் இருப்பதாகவும் கூறினாள்.

"ஏன் அவ இங்க வரவேண்டியது தானே"

"தெரியல மிஸ்"

அவளை அனுப்பி விட்டு கிளம்பினேன்.

www.padippakam.com

மனசுக்குள் ஏதோ எங்கோ பிசகிப் போனதை உணர்ந்தேன். கடவுளே... இதை எழுதும் தருணத்தில் எனக்கு எப்படி உடல் நடுங்குகிறது.

லேசான களைப்பில் இருப்பவளைப் போலிருந்தாள் ஆயிஷா.

"இன்னிக்கி... எக்ஸ்பரிமண்ட் சக்சஸ் மிஸ்"

"என்ன... என்ன எக்ஸ்பரிமண்ட்?"

"இந்தாங்க ஸ்கேல்... என்னை அடியுங்க பாப்போம்"

"ஏன்... ஆயிஷா... என்ன சொல்றே நீ...?"

"மருந்து மிஸ்... மரத்துப்போற மருந்து...

இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ்... எப்படி வேணும்னாலும் அடிச்சிக்கட்டும்..."

"ஆயிஷா... உனக்கென்ன பயித்தியமா"

"லேபிலிருந்து நைட்ரஸ் எத்தனால் கரைசல் கெடச்சது மிஸ்... முதல்ல இந்த தவளைக்குப் போட்டேன் ஊசி. இரண்டு மணிநேரம் மல்லாக்கப் போட்டாலும் உணர்ச்சி இல்ல... அப்போ மரத்துப் போச்சுனு அர்த்தம்..."

"..............."

"அப்புறம் அதே மருந்தை எனக்கு ஊசி போட்டுக்கிட்டேன்... எப்படி அய்...டியா"

"ஏம்மா... இப்படியெல்லாம் பண்ற"

"பாருங்க இந்த தவளைதான்"

நான் பார்த்த இடத்தில் இருந்த வாளித்தண்ணீரில் ஒரு தவளை தலை கீழாய் மிதந்தது.

"ஆயிஷா... நோ..."

"அய்யய்யோ... தவளை செத்துப் போச்சு... மிஸ்"



கடவுளே அதற்கு மேல் எழுத என்ன இருக்கிறது? வேதியியல் ஆய்வு கூடத்தின் பின்னால் ஆயிஷா விழுந்து கிடந்தாள். ஒரு மாலை மாதிரி விழுந்து கிடந்தாள். சின்ன கூட்டம் கூடியது. பியூன் கோவிந்தன் ஆட்டோ கொண்டுவர ஓடினான். சிஸ்டருக்கு சொல்லப்பட்டது. அவளை என் உயிருக்கு உயிரான ஆயிஷாவை சுமந்து கொண்டு நான் சாலைக்கு ஓடினேன். என் கண்ணான அவளை எப்படியாவது பிழைக்க வைத்துவிட வேண்டுமென தவித்தேன்.

ஆனால் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு போவதற்குள் என் ஆயிஷா பிரிந்து விட்டாள். எப்பேர்ப்பட்ட ஆயிஷா, நான் தாங்கிக் கொள்ள முடியாதவளாய் குழந்தை மாதிரி அவள் மீது புரண்டு கதறி அழுதேன். இனி என்ன உங்களுக்கு திருப்தி தானே மிருகங்களே...என் ஆயிஷாவை ஒப்பற்ற அந்த அறிவுக் கொழுந்தை கொன்று தீர்த்து விட்டீர்கள். போங்கள். இனி உங்கள் வகுப்புகள் எளிமையானவை... அறிவுக்கு அங்கு வேலை இல்லை.

ஆயிஷா என் கண்ணே... என் கண்களை திறந்து விட்டுவிட்டு ஏன் அவ்வளவு சீக்கிரம் என்னை விட்டு ஓடிப் போனாய், பார்... உனக்காக நீ கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதில்களைத் தேடித்தேடி எழுதி வைத்திருக்கிறேன். நீ சொன்னது போல தமிழில் எழுதியிருக்கிறேன்.

உன் மாதிரி எத்தனை ஆயிஷாக்களை நாங்கள் இழந்திருப்போம். நீ இறந்து போனாய். வயசுக்கு வந்த நாளோடு பள்ளிக்கூடம் விட்டு ஓடியவர்கள்! எங்கேயோ ஒரு ஊரில் யாரோ ஒருவனுக்காக துவைத்து, சமைத்து பிள்ளை பெற்றுப் போடுபவர்கள், ஆணின் பாலியல் பசிக்காக தன்னை விற்பவர்கள், முப்பது ரூபாய் சம்பளத்திற்காக வீடு பெருக்கி சாணி மெழுகுபவர்கள், வயல் கூலிகள், கட்டிடங்களுக்கு கல் உடைக்கும் பெண்கள் அவர்களில் எத்தனை ஆயிஷாக்கள் உள்ளனரோ. தன் விஞ்ஞானக் கனவுகளை நாள்தோறும் அடுப்பு நெருப்பில் போட்டு வேக வைத்து விடும் அந்த நூற்றுக் கணக்கான ஆயிஷாக்களுக்கு இந்த புத்தகத்தை கண்ணீரோடு சமர்ப்பிக்கிறேன்.

இந்த விஞ்ஞான நூலை வாசிப்பவர்கள் அதை ஒரு பத்துப் பெண்களுக்காவது இரவல் கொடுப்பார்களா?

அவர்களில் ஒரு ஆயிஷாவாவது இருப்பாளா? என் பொக்கிஷமே ஆயிஷா... நீ கேட்ட கேள்விகளிலேயே என்னை மிகவும் பாதித்த ஒரு கேள்வி உண்டு. அதை வாசகர் முன் வைத்து என் முன்னுரையை முடிப்பதே பொருத்தமாக இருக்கும்.

"மிஸ்... கரோலின் ஏர்ஷல் போலவோ மேரிக்கியூரி போலவோ நம்ம நாட்டுல பெயர் சொல்றா மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வரமுடியலையே ஏன்?"

இக்கேள்விக்குரிய பதிலை நான் சொல்ல வேண்டியதில்லை. தனது சொந்த வீடுகளின் இருண்ட சமையலறையில் போய் அவர்கள் அதை தேடட்டும்.

(ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதிய முன்னுரை)

நன்றி
கணையாழி

படிப்பகம்

www.padippakam.com







28-06-1998இல் நடை பெற்ற வித்தியாலய விழாவின்
கலை நிகழ்வில் பங்கு கொண்ட கலைஞர்கள்







படிப்பகம்

www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியாலயம்
# பழைய மாணவர் சங்கம்

## உறுப்பினர் விண்ணப்பப் படிவம்

பெயர்: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி: . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

தொலைபேசி இலக்கம்: . . . . . . . . . . . . . . . . . .

இதன் கீழ் கையொப்ப மிடுபவராகிய நான் வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க உறுப்பினராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக இயன்ற பங்களிப்பை வழங்குவேன் என்று இத்தால் உறுதிப்ப டுத்துகிறேன்.

இவ்வண்ணம்

திகதி __________________ ஒப்பம். __________________

---

அலுவலக உபயோகத்திற்கு

உறுப்பினர் இலக்கம்:

அங்கீகரிக்கப்பட்ட திகதி:

-------------------------

செயலாளர்

படிப்பகம்

www.padippakam.com

நன்றிக்குரியவர்கள்
வித்தியாலயம் 2000 விழாச் சிறப்புற ஒத்துழைத்தவர்கள்
மலருக்கான ஆக்கங்களைத் தந்துதவியவர்கள்
வெளிநாடுகளிலிருந்து ஆசிச்செய்தியை அனுப்பிவைத்தவர்கள்
ஆக்கங்களை கணிப்பொறியில் பதித்துத் தந்தவர்கள்
மலரினை வடிவமைத்துத் தந்த கிருஷ்ணா அச்சகத்தார்
நடன, நாடக, பட்டிமன்ற நிகழ்வுகளில் பங்குகொண்ட கலைஞர்கள்
மற்றும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும்
வேலணை மத்திய மகாவித்தியாலய
பிரான்ஸ் கிளையின் பழைய மாணவர் சங்கம்
தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



# நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசா
## 1943 - 2000

**கண்ணியம் - விடாமுயற்சி - ஆழுமை இவரின் முத்திரைகள்**

நான்கு தசாப்தங்களாக இலங்கையின் பல பாகங்களில் மாத்திரமல்ல ஐரோப்பிய நாடுகளிலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மேடைகளில் சரித்திர-சமூக-இசை நாடகங்களில் நடித்த நடிப்பிசைக் காவலர் கிறெகரி தங்கராசா மறைந்த செய்தி கலை உலகையே அதிரவைத்துள்ளது.
இவரின் நடிப்பு குரல்வளம் ஆகியவற்றின் திறமை பற்றி கலைஞர்கள் இசை விற்பனர்களிடம் கருத்து வேறுபாடுகளில்லை.

இலங்கைத் தமிழ்மக்களுக்கு தனியான தமிழரசு ஒன்று இருக்குமானால் இவருக்குக் கலைமாமணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கும். கலைஞர்களை வாழும்போதே வாழ்த்த வேண்டும் என்பதற்கிணங்க கிறெகரி தங்கராசா பலரிடம் இருந்து வாழ்த்துக்களும் பட்டங்களும் பெற்றதோடு பல கலைஞர்கட்கும் பாரிசில் பட்டங்களும் தங்கப் பதக்கங்களும் வழங்கி கௌரவித்துள்ளார்.

யாழ் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தந்தை திரு.டேவிட் கூட நாடகங்களிலும் நாட்டுக்கூத்துக்களிலும் நடித்த சிறந்த நடிகர். இவரின் வழிவந்த கிறெகரி தங்கராசா ஓர் கலைக்குடும்பத்தின் வழித்தோன்றலேதான்.

நாட்டுக்கூத்துக்கலையால் மேதை என வர்ணிக்கப்பட்ட பூந்தான் ஜோசேப்பு அவர்களுடனும் நாட்டுக்கூத்தின் ஒப்பற்ற கலைஞன் நடிகமணி வி.வி.வைரமுத்து போன்றோருடனும், பாரிஸ் பெஞ்சமின் இமானுவேல் போன்ற மாபெரும் கலைஞர்களுடன் இணைந்து நடித்துப் புகழும் பாராட்டுக்களும் பெற்றவர் இவர். நடிகமணி வி.வைரமுத்துவை தனது மானசீகக் குருவாகக் கொண்ட கிறெகரி தங்கராசா இலங்கையின் முன்னணி நாடக இயக்குனர்கள் இயக்கிய நாடகங்களிலும் நடித்துள்ளார்.

அருட்தந்தை சவரிமுத்து மரியசேவியர் அவர்களின்இயக்கத்தில் உருவான பல நாடகங்களில் இருபத்தைந்தாண்டுகட்கு மேலாக இலங்கை இந்திய ஐரோப்பிய நாடுகளில் நடித்துப் பெருமை தேடிக்கொண்டவர். இவர் நடித்த நாடகங்களுள் *வழக்கறிஞன் வியாபகம் ஊதாரிப்பிள்ளை களங்கம் பலிக்களம் மயானகாண்டம் பரிணாமம் கருங்குயில் குன்றத்துக் கொலை* என்பன என்றும் மக்களின் மனத்திரையில் நிற்கின்ற நாடகங்களாகும்.

இவர் நடிப்பு இசை என்பனவற்றுடன் தானாகவே பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நேர்த்தியாக நிறைவேற்றியுள்ளார். பாரிசில் *கலைக்கோயில்* கலை அமைப்பை தோற்றுவித்து அதன் மூலம் இலைமறை காயாக இருந்த பல கலைஞர்களை வெளிக்கொணர்ந்துள்ளார். ஜனவரி 2000 இல் பாரிசில் இடம்பெற்ற இவரின் கடைசி நிகழ்ச்சியான *சவுலே சவுலே* நாட்டுக்கூத்தில் பிரபல கர்நாடக இசை வித்தகர் குலசீலநாதன் அவர்களையே நாட்டுக்கூத்துப்பாடி நடிக்கவைத்த பெருமை இவரையே சாரும்.


**கிறெகரி தங்கராசாவின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் இவரின் கண்ணியம் - ஆளுமை - விடாமுயற்சி என்ற மூன்று அம்சங்கள் அடித்தளமாக அமைந்தன. இவர் இசைக்கும் நடிப்பிற்கும் தனது வாழ்நாள் முழுவதையுமே அர்பணித்தார் என்றால் மிகையாகாது.**

தனது கடைசி மூச்சுவரை நடித்துக் கொண்டிருக்கவேண்டும்-பாடிக்கொண்டிருக்கவேண்டும் என எண்ணி வாழ்ந்த இந்த மாபெரும் கலைஞனின் எண்ணம் உண்மையாகவே ஆகிவிட்டது. இந்த நேரத்தில் இம் மாபெரும் கலைஞனின் மறைவை எண்ணி அஞ்சலிப்போம்.

**– யா. பாலகிருஷ்ணன்.**

படிப்பகம்

www.padippakam.com



ஓவியம்: அ. தேவதாசன்

படிப்பகம்